இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி X, பதிப்பு 23, ஜனவரி – ஜீன் 2026
Formally UGC Approved Journal (64089), © Author

# கவிஞர் வைரமுத்து 'நீர்' கவிதையில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்

**முனைவர்.பா.ஈஸ்வரன்**
உதவிப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
அரசு மகளிர் கல்லூரி
வழுதக்காடு, திருவனந்தபுரம்.

**ஆய்வுச்சுருக்கம்**

*கவிஞர் வைரமுத்து எழுதிய "மகா கவிதை"களில் ஒன்று 'நீர்' கவிதை. இக்கவிதை ஐம்பத்தி நான்கு பக்கங்களையுடைய நீண்ட கவிதையாகும். அதிக அடிகளைக் கொண்ட கவிதை என்றாலும் படிப்பதற்குச் சலிப்பு ஏற்படாமல் விறுவிறுப்பாகச் இருக்கிறது. இக்கவிதையில் இன்றைய காலகட்ட தலைமுறையினருக்கான முக்கியமான கருத்துகளைச் சுற்றுச்சூழல் சிந்தனையோடு பதிவு செய்துள்ளார். கணினியுக காலகட்டத்தில் நீரின் முக்கியத்துவம், குடிதண்ணீருக்குப் பயன்படும் நீர் ஆதாரங்களாக விளங்கும் நதிகள், ஆறுகள், கிணறுகள். குளங்கள் ஆகிய வளங்களை மனிதர்கள் எவ்வாறெல்லாம் மாசுபடுத்துகின்றனர் என்பதைப் பற்றிய கருத்துக்களைக் கவிதையில் எடுத்தியம்பியுள்ளார். ஆதலால், தண்ணீரின் இன்றியமையாமை, புனிதத்திற்குப் பெயர்போன கங்கை, யமுனை நதிகளிலும் ஆறுகளிலும் கிணறுகளிலும் குளங்களிலும் சாக்கடை, தொழில்சாலைக் கழிவுகள், இரசாயனம், சாயப்பட்டறைக் கழிவுகள் கலப்பதால் குடிதண்ணீர் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலும்*

*பாதிப்பிற்குள்ளாகிறது என்பதைப் பற்றிய ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**குறிச்சொற்கள்:** வைரமுத்து, நீர், கவிதை, தண்ணீரும் உயிர்த்தாகமும், மழையே கடவுள், தாயின் கருவறையில் தண்ணீர் குடமாய், மனிதனுக்கும் நீருக்குமுள்ள உறவு, தண்ணீரும் மாறுவேடமும், நீரின் அவதாரங்கள், நதிகளில் சாக்கடைக் கழிவுநீர் கலத்தல்

**முன்னுரை**

கவிஞர் வைரமுத்து எழுதிய மகா கவிதைகளில் ஒன்று 'நீர்' கவிதை. இக்கவிதை ஐம்பத்தி நான்கு பக்கங்களையுடைய நீண்ட கவிதையாகும். அதிக அடிகளைக் கொண்ட கவிதை எனினும் படிப்பதற்குச் சலிப்புத்தட்டால் விறுவிறுப்பாகச் செல்லுகிறது. இந்தக் கவிதையில் இன்றைய இளைய தலைமுறையினருக்கான சிறந்த கருத்துகளைச் சுற்றுச்சூழல் சிந்தனையோடு திறம்படப் பதிவு செய்துள்ளார். இன்றைய நவீன கணினியுக காலகட்டத்தில் நீரின் முக்கியத்துவம் பற்றியும், குடிதண்ணீருக்குப் பயன்படும் நீர் ஆதாரங்களாக விளங்கும் நதிகள், ஆறுகள், கிணறுகள். குளங்கள் ஆகியவற்றை மனிதர்கள் எவ்வாறெல்லாம் மாசுபடுத்துகின்றனர் என்பதைப் பற்றியும் கருத்துக்களை கவிதையில் திறம்பட எடுத்தியம்பியுள்ளார். ஆகையால், தண்ணீரின் இன்றியமையாமை, புனிதம் என்று சொல்லப்படுகின்ற அல்லது புனிதத்திற்குப் பெயர்போன கங்கை, யமுனை நதிகளிலும் ஆறுகளிலும் கிணறுகளிலும் குளங்களிலும் சாக்கடை, தொழில்சாலைக் கழிவுகள், இரசாயனம், சாயப்பட்டறைக் கழிவுகள் கலத்தலால் குடிதண்ணீர் மாசுபடுவதோடு சுற்றுச்சூழலும் பாதிப்படைகின்றது என்பதைப் பற்றிய செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கவிப்பேரரசு வைரமுத்துவைப் பற்றிய செய்திகள்**

கவிஞர் இரா. வைரமுத்து தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம் அருகில் வடுகபட்டி கிராமத்தில் இராமசாமி – அங்கம்மாள் என்பவருக்கு 13.07.1953ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர். இவரின் மனைவி பெயர் பொன்மணி. மகன்கள் கார்க்கி, கபிலன். வைரமுத்து சென்னையிலுள்ள

பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றவர். 1980 ஆம் ஆண்டு நிழல்கள் திரைப்படத்தில் 'இது ஒரு பொன்மாலைப் பொழுது' எனத் தொடங்கும் பாடலை எழுதினார். சிறந்த பாடலாசிரியருக்கான குடியரசுத் தலைவர் விருதினை 1985, 1993, 1994, 1999, 2002, 2010, 2016-ஆம் ஆண்டுகளில் பெற்றவர். கலைமாமணி விருது மற்றும் பத்மஸ்ரீ விருதினைப் பெற்ற சிறப்பிற்குரியவர்.

**வைரமுத்துவின் படைப்புகள்**

கவிஞர் இரா. வைரமுத்துவின் முக்கியமான கவிதைத் தொகுப்புகளாக "வைகறை மேகங்கள், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், எனது பழைய பனையோலைகள், கவிராஜன் கதை, இரத்த தானம், இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல, தமிழுக்கு நிறைமுண்டு, பெய்யெனப் பெய்யும் மழை, எல்லா நதிகளிலும் எங்கள் ஓடங்கள், கொடி மரத்தின் வேர்கள்"[1] ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவருடைய முக்கியமான கட்டுரைத் தொகுப்புகளாக "கல்வெட்டுகள், என் ஜன்னலின் வழியே, நேர் போட்ட கோலம், ஒரு மௌனத்தின் சப்தங்கள், சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன், வடுகபட்டி முதல் வால்கா வரை, இதனால் சகலமானவர்களுக்கும், இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள், கொஞ்சம் தேனீர் நிறைய வானம், தமிழாற்றுப்படை"[2] ஆகியவற்றைக் கூறலாம். மற்றும் இவர் எழுதிய புதினங்களாக "வானம் தொட்டுவிடும் தூரம்தான், மீண்டும் என் தொட்டிலுக்கு, வில்லோடு வா நிலவே, சிகரங்களை நோக்கி, ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும், காவி நிறத்தில் ஒரு காதல், தண்ணீர் தேசம், கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர்"[3] ஆகியவற்றைக் கூறலாம். இதுமட்டுமல்லாமல் "இதுவரை நான்"[4] என்றும் தன்வரலாற்றையும் எழுதியுள்ளார்.

**தண்ணீரும் உயிர்த்தாகமும்**

மனிதன் பல காரணங்களில் பல சூழல்களில் ஒரு நாளில் மூன்று நேரம் கூட உணவில்லாமல் இருந்துவிடுகிறான். ஆனால், ஒரு நாளில் தண்ணீர் இல்லாமல் அவனால் இருக்க முடிவதில்லை. காரணம் நீருக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பாகும். மனிதனுக்குத் தண்ணீர்த்தாகம்

வந்துவிட்டால் அவனுடைய இனிமையான தாய்மொழியைத் தன்னுடைய செவியல் கேட்டாலும், திரவத்தங்கமே என்றாலும், ஜீவரத்தினமே என்றாலும், பெரும்பொருள் தருகிறேன் என்றாலும் அவனால் தண்ணீர்த் தாகத்தைப் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. தண்ணீர் என்று சொன்னால் மட்டுமே அவனுடைய உயிர்த்தாகம் தணிகிறது என்பதனை,

**"மேக தேவதைகளின்**
**தாய்மொழியே என்றாலும்**
**பூமியிலிருந்து றெக்கை முளைத்து**
**பூமிக்கே வந்த**
**திரவத் தங்கமே என்றாலும்**
…………………………..
**தண்ணீர் என்று சொன்னால்தான்**
**உயிர்த்தாகம்**
**தணிகிறது எமக்கு"**[5]

இக்கவிதையின் அடிகள் நமக்கு உணர்த்துகின்றன. எப்படிப்பட்ட கிட்டற்கரிய உயர்ந்த பொருளை ஒருவருக்குக் கொடுத்தாலும் தாகம் தீர்ந்துவிடாது. தண்ணீரைக் கொடுத்தால்தான் தாகம் தணியும் என்ற உண்மை நடப்பியலை கவிஞர் அழுகுற எடுத்துரைத்துள்ளார். அப்படிப்பட்ட தண்ணீரை திருவள்ளுவர் அமிழ்தம் என்றே கூறுகிறார். இதனை,

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று."**[6]

என்னும் குறட்பா மூலம் அறிந்துகொள்ளலாம்.

**கடவுளின் கடவுள் தண்ணீர்**

தண்ணீருக்கு நிறமில்லை என்கிறது அறிவியல். வானத்திற்கு நிறத்தைத் தருகிறது தண்ணீர். நீருக்கு வடிவம் இல்லை. மண்ணிற்கு வடிவத்தைத் தருகிறது. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற சந்தேகத்திற்கு இன்றுவரையிலும் முடிவில்லை. கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

அந்தத் தூணிற்குள்ளும் துரும்பிற்குள்ளும் நுளைந்து தங்குவதால் தண்ணீர் கவுளின் கடவுளாகக் காட்சி தருகிறது. இதனை,

**“நிறமில்லை உனக்கு**
**நீதான் நிறமூட்டினாய் வானுக்கு**
**வடிவில்லை உனக்கு**
**நீதான் வடிவு தந்தாய் மண்ணுக்கு**
**எங்கே கடவுளென்ற**
**சலனச் சந்தேகம்**
**தீர்ந்தபாடில்லை இன்னும்**
**ஆனால்,**
**தூணோடும் துரும்போடும்**
**துளைத்தோடி உறைவதனால்**
**கடவுளுக்கும் ஐய்யுறாத**
**கடவுள் நீதான் ”**[7]

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன. உண்மையில் தண்ணீர்த்தாகத்தைத் தீர்க்கின்றது தண்ணீர். நம் உயிருக்கு எது அடிப்படை மூலமோ அதுதான் கடவுளின் கடவுளாக இருக்க முடியும். அந்த வகையில் பொதுவாக உயர்திணை அஃறிணை என்ற பாகுபாடில்லாமல் அனைத்து உயிர்களுக்கும் உயிர் நாடியாக விளங்குபவை தண்ணீர்தான். தண்ணீர் இல்லையென்றால் இந்த உலக உயிர்கள் இயங்காது என்பது திண்ணம்.

**மழையே கடவுள்**

உலகப்பொதுமறையை இயற்றிய வள்ளுவன் 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களை நமக்குத் தந்துள்ளார். பெரும்பான்மையாக முதலில் எந்தவொரு காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பாகக் கவுளை நினைத்து வணங்கித்தான் செயல்களைச் செய்வோம். இவற்றில் மதபேதமில்லை. அவ்வகையில் திருவள்ளுவரும் தான் இயற்றிய முப்பாலில் முதல் அதிகாரமாகக் கடவுளை வணங்குதல் பொருட்டு கடவுள் வாழ்த்தை வைத்துள்ளார். இதற்கு அடுத்தபடியாக எந்தவொரு அதிகாரத்தையும்

வைத்திருக்கலாம். ஆனால், சிறப்பு கருதி 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தை வைத்துளார் என்று வைரமுத்து கூறுகிறார். இதனை,

**"சில பொழுதுகளில்**
**கடவுள் ஆசனத்தில்**
**மழை அமர்வதை**
**ஆகம விதிகள் ஆட்சேபதித்ததில்லை**
**வள்ளுவ ஞானியும்**
**கடவுள் வாழ்த்தருகே**
**வான்சிறப்பு வைத்தனன் ஏன்?**
**முதல் அதிகாரம் கிழிந்துபடில்**
**மழையே கடவுளாகும்**
**சகல சாத்தியம் கருதித்தான்"**[8]

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. ஒருவேளை கடவுள் வாழ்த்து அழிந்து விட்டால்கூடப் போகட்டும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வானம் பொழியும் மழையின் சிறப்பை நினைவில் வைத்துதான் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தை கடவுள் வாழ்த்தருகில் வைத்துள்ளார் என்ற காரணகாரியத்தைக் கூறுகிறார்.

**தாயின் கருவறையில் தண்ணீர் குடமாய்**

மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் தண்ணீர் எந்த அளவிற்கு முக்கிய இடம் வகிக்கின்றது என்பதை அனைவரும் அறிவோம். மனிதன் வாழ்வதற்கு மட்டுமல்லாமல் தாயின் கருவைறையில் சிசு உருவாவதற்கும் உயிர் நாடியாக விளங்குவது தண்ணீர்தான். இதனை,

**"தாயின் கருப்பையில்**
**நீச்சலடிக்கவும்**
**மிதந்து வெளியேறவும்**
**சிசுவுக்குத்**
**தண்ணீர்த் தொட்டிகட்டுகிறாய்"**[9]

உயிர் தாயின் கருவறையில் உருவாகி அக்கரு நன்றாக வளருவதற்கு தண்ணீர் குடமாக வடிவம் எடுக்கிறது. தண்ணீர் அவ்வாறு மாற்றமடைவதால்

சிசு நீச்சலடித்து மிதந்து வெளி உலகத்திற்கு வருவதற்கு ஏதுவாக அமைகின்றது.

**மனிதனுக்கும் நீருக்குமுள்ள உறவு**

பொதுவாக அனைத்து உயிரினங்களுக்கும் பிறப்பில் தண்ணீர் பெரும்பங்காற்றினாலும் இறப்பின் பிறகு தண்ணீரின் அவசியம் பொரும்பாலும் இருப்பதில்லை. ஆனால், மனிதனுக்கும் நீருக்குமான உறவு பிறப்பு தொடங்கி இறப்பின் பின்பு வரை நீடிக்கிறது என்பதை,

**"தாய்க்குடம் உடைந்து**
**பிறக்கிறோம்**
**தண்ணீர்க்குடம் உடைத்து**
**முடிக்கிறோம்"**[10]

இந்நான்கு அடிகளில் தத்துவக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. தாயின் கருவறையிலுள்ள தண்ணீர்க்குடம் சிசுவிற்குப் பாதுகாப்பு அரணாக விளங்குகிறது. அதனால், சிசு உள்ளே பாதுகாப்பாக வளர்கிறது. நன்றாக வளர்ந்தவுடன் அக்குடம் உடைந்து சிசு வெளியேறுகிறது. இன்றைய அறிவியல் உலகில் இதனை இயற்கையின் அற்புதம் என்றே கூறலாம். மனிதன் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து வெளியுலகில் மனிதனாக வாழ்க்கையை முடித்து இறப்பினை எய்துகிறான். பிறப்பில் மட்டுமல்லாமல் இறப்பிலும் மனிதனுக்கு இடுகாட்டில் இறுதியாகத் தண்ணீர்க் குடம் உடைத்து சடங்கை நிறைவு செய்கிறார்கள். இதனை மக்கள் தந்தைக்குச் செய்யும் பிறப்புக்கடன் என்கிறார்கள்.

**தண்ணீரும் மாறுவேடமும்**

இரத்தமாகவும், உமிழ் நீராகவும், வேர்வையாகவும், விந்துவாகவும், கண்ணீராகவும் தண்ணீரானது பல்வேறு மாறுவேடங்களைக் கொள்கிறது என்று வைரமுத்து தன்னுடைய கவிதையடிகளில் உலகியல் எதார்த்தத்தை நயமுடன் வாசகர்களுக்கு எடுத்துரைக்கிறன்றார்.

**"உயிர்த்தபோது**
**உடல் கொடுத்தது ரத்தம்**
**புசித்தபோது**

**பசிகிளர்த்தியது உமிழ்நீர்**

**உழைத்தபோது**

**நிலம் விளைத்தது வேர்வை**

**கலந்தநேரம்**

**வம்சம் வார்த்தது விந்து**

**அழுத வேளை**

**மனிதம் வார்த்தது கண்ணீர்**

**ரத்தம் உமிழ்நீர்**

**வேர்வை விந்து**

**கண்ணீர் எல்லாம் வேறென்ன?**

**மாறுவேடம் பூண்ட தண்ணீர்**"[11]

என்னும் கவிதையடிகள் சான்றுபகர்கின்றன. பிறந்தபோது தண்ணீர் இரத்தமாக மாறி உடலைத் தருகிறது. பசி எடுக்க வைப்பதும் உணவு உண்ட பின்பு உணவைச் செறிக்க வைப்பதும் தண்ணீர் என்ற உமிழ் நீர்தான். உழைப்பதால் தண்ணீர் வியர்வையாக மாறுகிறது உழைப்பால் நிலம் விளைச்சலைத்தருகிறது. ஆணும் பெண்ணும் இணைந்தபோது தண்ணீர் விந்துவாக மாறி வம்சத்தை விருத்தியாக்குகிறது. அழுகின்ற போது தண்ணீர் கண்ணீராக மாறி இரக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**நீரின் அவதாரங்கள்**

நீரானது உணவாக, காற்றாக, பயிரின் நிறமாக, அருவியாக, ஆறாக, கடலாக, பனிக்கட்டியாக, மேகமாக இவ்வாறு வொவ்வொரு நிலைகளிலும் வெவ்வேறு அவதாரங்களை எடுக்கிறது என்பதனை,

**"உண்ணும் உணவாய்ப்**

**பருகும் காற்றாய்**

**உயிரின் உயிராய்**

**பயிரின் நிறமாய்**

**ஒன்றுமாய் இரண்டுமாய் பலவாய்**

**ஒவ்வொரு நிலையிலும்**

**வெவ்வேறு அவதாரம் கொள்கிறாய்**

**நீ**

**நின்ற நிலை அருவி**

**நடந்த நிலை ஆறு**

**கிடந்த நிலை கடல்**

**உறைந்த நிலை பனிக்கட்டி**

**உலவு நிலைமேகம்**”[12]

மேற்காணும் பாடலடிகள் உணர்த்துகின்றன. உணவு, காற்று, பயிரின் நிறம், அருவி, ஆறு, கடல், பனிக்கட்டி, மேகம் இவையெல்லாம் நீராக இருந்தாலும் மலைமேலிருந்து கீழாக வரும் நீரை அருவி என்கிறோம். அதே நீர் தரையில் கீழே ஓடினால் ஆறு என்கிறோம். அதுவே சமமாகப் பரந்த நிலையில் கிடந்தால் கடல் என்கிறோம். அந்நீர் உறைந்த நிலையில் இருந்தால் பனிக்கட்டி என்கிறோம். அதே நீர் ஆவியாகி வானத்தில் உலவும்போது அதனை மேகம் என்கிறோம். இப்படி நீரானது பலபெயர்களைப் பெற்று அண்டத்தில் உலாவும் சிறப்பினைப் பெறுகிறது. இவ்வாறு மாறுவேடம் பூண்ட தண்ணீரானது மனிதர்கள் உண்பதற்கான உணவினை விளைவித்துத் தருவதோடு நின்றுவிடாமல் தானும் தாகம் தீர்க்கும் உணவாக அமைகின்றது என்பதனை,

“**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**

**துப்பாய தூஉம் மழை**”[13]

மேற்காணும் குறட்பா சான்றுபகர்கின்றது.

**நீரின் மகத்துவமும் மனிதனின் இழிவும்**

தண்ணீர்த்தாகம் எடுத்து நாவு வரண்டு உதடு காய்ந்து வெடிக்கும் போது நாவை வைத்து உதட்டை ஈரப்படுத்திக்கொள்ளும்போது மனிதன் தண்ணீரின் மகத்துவத்தை அறிவதில்லை. ஆனால், மயக்கமடைந்து சாவின் எல்லைவரைப் போனவனைத் தண்ணீர் தெளித்து உயிர் வரவழைத்தபோது நீரின் முக்கியத்துவத்தை உணர்கிறான். அந்நிலையில் மட்டுந்தான் தண்ணீர் கடவுள் அனுப்பி வைத்த தூதுவன் என்று நினைக்கிறான். மற்ற நேரங்களில் தண்ணீரை எப்படியெல்லாம் மாசுபடுத்துகிறான் என்பதனை,

“**ஒரு சொட்டு நீருமின்றி**

**உதடுவெடிக்க**

**நாவைத் தூக்கி**

**உதட்டுக்கு ஈரப்பசை**

**பூசும் போதும்**

**உணரப்படாத உன் பெருமை**

**மூர்ச்சையுற்ற முகத்தில்**

**உன்னைத் தெளித்ததும்**

**சாவுவரை போனவன்**

**வாழ்வின் வழி திரும்புகையில்**

**உணரப்படுகிறது**

…………………………

**உன்**

**சிறுநீரகத்தை இப்படிச்**

**சிதைத்திருக்கக் கூடாது**

**கடவுளின் கண்ணீரில்**

**கழிவுநீர் கலந்திருக்கக் கூடாது**"[14]

மேற்காணும் பாடலடிகளின் மூலம் அறிந்துகொள்ளமுடிகின்றது. மனிதன் தன்தேவையிருந்தால் மதிப்பான் இல்லையெனில் மிதிப்பான் என்னும் சில மனிதர்களுடைய இயல்பான இழிகுணத்தை இக்கவிதை எடுத்துரைக்கின்றது. மனிதனுக்கு எப்படி கல்லீரலும் சிறுநீரகமும் முக்கியமோ அதுபோலத் தண்ணீர் உலக உயிரினங்களுக்கு முக்கியமானது. குடிதண்ணீரில் மனிதன் கழிவு நீரைக் கலக்கச் செய்வதனைக் கவிஞர் சாடுகின்றார்.

**நதிகளில் சாக்கடைக்கழிவு நீர் கலத்தல்**

குடிநீருக்குப் பயன்பட்ட அழகான நதிகளில் சாக்கடைக்கழிவு நீரை மனிதன் கலந்துவிடுகிறான். அதனால், நதிநீர் துர்நாற்றம் எடுக்கின்றது. அவற்றில் பாம்பு நுரையோடு ஓடுகின்றது. மலைப்பாம்பு செத்துக்கிடக்கின்றது. நதியின் நிறம் கருப்பாகிவிட்டது. நீருக்கு நிறமில்லை என்ற விஞ்ஞான விதியை மனிதன் பொய்யாக்கிவிட்டான்.

இதுமட்டுமல்லாமல் நதிகளில் மணல்கொள்ளை. மண்டியிட்டு நீர் குடித்த மகாநதி இன்று பன்றிகளின் பள்ளியறையாய் ஆகிவிட்டது. இதனை,

**“கழிவுப்பள்ளத்தில் நாறுகிறது**
**வளைந்தோடிய சௌந்தர்யம்**
**ஒவ்வோர் ஊரின்**
**பக்கவாட்டிலும்**
**கடைவாயில் நுரையோடு**
**பாம்போடுகிறது**
**சில ஊர்களில்**
**செத்த மலைப்பாம்பு**
**படுத்தே கிடக்கிறது**
……………………
**குடிநீரின் ஊற்றாய் இருந்த நதி**
**கழிவுகளின் கால்வாயாய்**
**மண்டியிட்டு நீர்குடித்த**
**மகாநதி இன்று**
**பன்றிகளின் பள்ளியறையாய்…**
**பாறை மறைந்து**
**மணல் மின்னும் காலம்போய்**
**மணல் மறைந்து பாறைகளாய்… ”**[15]

என்னும் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. அக்காலத்தில் நதி நீர் எவ்வாறு இருந்தது. மக்கள் அதனை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார் வைரமுத்து. அதேபோல் மனிதன் இன்றைய காலகட்டத்தில் நதிநீரை மாசுபடுத்துவதால் நதிநீர் நிறம் கருப்பாவதும் அதனால் நதிகளில் பாம்புகள் செத்துக்கிடப்பதையும் மணல் கொள்ளையடிக்கப்படுவதையும் எடுத்துக்காட்டுவதோடு, மனிதர்கள் இவ்வாறு செயல்பட்டால் எதிர்காலத்தில் தண்ணீருக்குப்பதில் எதைக்குடிப்பார்கள் என்று சிந்திக்கவும் வைக்கிறார்.

**இரசாயனக் கழிவு**

நீருக்கு நிறமில்லை என்கிறது நமது விஞ்ஞானம். ஆனால், நதிகளின் நிறம் வெண்மையாகக் காட்சியளிக்கிறது. காரணம் ரசாயனக் கழிவு நீர் கலப்பதால் நிதி வெண்மை நிறமாகக் காணப்படுகிறது. இதனை வெள்ளைக்கொடி ஏந்திவரும் நவீன யுத்தம் என்றே கூறலாம்.

**“சில ஊர்களில்**
**நதியின் நிறம்**
**வெள்ளை நுரைகளாய்**
**விஷச் சிறகுகளாய்**
**வெள்ளைக்கொடி ஏந்திவரும்**
**யுத்தமாய்**
**வெகு பயங்கரம்**
**அதை**
**ரசாயனக் கழிவு என்பது**
**பல்கலைக் கழகங்களின்**
**விஞ்ஞானச் சொல்லாக்கம்”**[16]

இவ்வாறு நதிகளில் இரசாயனக் கழிவுகளைக் கலக்கச் செய்வது நமக்கு நாமே சாவுக்குழி வெட்டிக்கொள்கிறோம் என்றுதான் அர்த்தம். நாம் குடிக்கும் குடிநீர், உண்ணும் உணவுகள் எல்லாம் விசமாகத்தான் மாறும். விசத்தில் உருவான காய்கறி, அரிசி ஆகியவற்றை இன்றளவும் நாம் உட்கொண்டுதான் இருக்கிறோம். அதனால்தான் மனிதர்களுக்கு இவ்வளவு நோய்கள் ஏற்படுகின்றன என்பதை மானிடக்கூட்டம் சிந்திக்கவேண்டும்.

**சாயப்பட்டறைக் கழிவு**

இயற்கை நெசவு மறைந்து இயந்திர நெசவு உருவாகிய இன்றைய காலகட்டத்தில் ஆடை தயாரிக்க நூல்களுக்கு இரசாயனச் சாயத்தைப் பூசுகின்றனர். அதனுடைய கழிவுநீர் நிலத்தடி நீர்மட்டத்திற்குச் செல்கிறது. பின்பு கிணறுகளில் உள்ள ஊற்றுகளுக்கும் செல்கிறது. இதனால், கிணறுகளில் தண்ணீர் சிவப்பாகக் காட்சி தருகிறது என்பதை,

**“கிணறுகளின் ஊற்றுக் கண்களில்**

**சிவப்புச் சிவப்பாய்**

**ரத்தக்கண்ணீர்**

**அதைக் கழிவுச் சாயம் என்பது**

**'பண்டித' வழக்கு**"[17]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு சாயப்பட்டறைக் கழிவுநீர் கிணற்று ஊற்றுகளில் கலப்பதால் விவசாய நிலங்கள் கெட்டுவிடுவதோடு மலட்டுத்தன்மை அடைகின்றது. அதனால் நெல், காய்கறி, கிழங்கு, தானிய விளைச்சல் ஆகியவை எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடும் என்பதைச் சாயப்பட்டறைத் தொழிற்சாலை முதலாளி வர்க்கமும் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

**தோல் தொழிற்சாலைக் கழிவு**

கோயிலும் குளமும் இல்லாத ஊர்களில் குடியிருக்க வேண்டும் என்பது முன்னோர் வழக்கு. ஊரில் கோயில் இருக்கிறதோ இல்லையோ குளம் இருக்கவேண்டும். ஏனென்றால் மனிதனின் அடிப்படைத் தேவையே தண்ணீர்தான். அக்காலத்தில் மழை நீரைச் சேகரிப்பதற்கு குளம் வெட்டி வைத்தார்கள். குளந்தான் அவ்வூருக்கு குடிநீர் மூலதனம். அப்படிப்பட்ட குளங்களில் தோல் தொழிற்சாலைக் கழிவுநீர் கலப்பதை,

"**சில ஊர்களின்**

**குடிநீர்க் குளங்களில்**

**மாமிசம் மணக்கிறது – அதைத்**

**தோல்கழிவு என்பது 'தொன்மம்'** "[18]

என்னும் கவிதையடிகள் எடுத்துரைக்கின்றன. மக்கள் குடிநீருக்குப் பயன்படுத்தும் குளங்களில் தோல் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் மாமிச நாற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு நீர்நிலைகளை மாசுபடுத்தினால் காலநிலைகளில் மாற்றம் ஏற்பட்டு மழையும் பொய்த்துவிடும். மழைபொய்த்து விட்டால் உழவுத்தொழில் நடைபெறாது என்பதைப் பொய்யில்புலவர்,

"**ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**

**வாரிவளம் குன்றிக் கால்.**"[19] என்னும் குறட்பாவில் எடுத்துரைக்கின்றார்.

**நாகரீகம் – அநாகரீகம்**

நம்மைச் சுற்றிலுமுள்ள நதிகளிலும் கிணறுகளிலும் குளங்களிலும் சாக்கடைக் கழிவுகளையும்,இரசாயனக் கழிவுகளையும் மாமிசக் கழிவுகளையும் கலக்கச் செய்து மாசுபடுத்துவது என்பது நமக்கு நாமே விசம் வைப்பது என்பதை,

**“நம்மைச் சுற்றி**
**நஞ்சுவைத்து**
**நாமே கொன்றுகொள்வதே**
**நாகரிகமாயின்**
**அநாகரிகம் என்பது**
**எத்துணை துக்கமோ?”**[20]

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. நமக்கு நாமே தீங்கு விளைவித்துக்கொள்வது நாகரிகம் என்று கொண்டால் அநாகரிகம் என்பது எவ்வளவு கொடியவையாக இருக்கும் என்று கவிஞர் மனிதர்களைச் சிந்திக்க வைக்கிறார்.

**நீரின் கணக்கு**

மனிதன் நீரினை மாசுபடுத்தாமல் சிந்தித்துச் செயல்படவேண்டும் என்பதற்காக, நீரைப் பற்றிய ஒரு சிறிய கணக்கினை வைரமுத்து தன் கவிதையில் மனிதர்களுக்குக் காட்டுகிறார். இதனை,

**“ஒரு சின்னக் கணக்கு**
**அறிய வேண்டும்**
……………….
**மொத்த நீரில்**
**சுத்த நீரோ**
**மூன்றே விழுக்காடு**
**அதில் துருவங்களில் உறைந்தது**
**தொலையாழத்தில் மறைந்தது**
**ஒவ்வொரு விழுக்காடு**
**ஒரு விழுக்காடு மிச்சம்தான்**
**உயிர் வளர்க்க**

**பயிர் வளர்க்க**

**தொழில் வளர்க்க**

**தொகை வளர்க்க**"[21]

என்னும் பாடலடிகள் நிரூப்பிக்கின்றன. உலகம் மூன்று பக்கம் கடலாலும் ஒருபக்கம் நிலத்தாலும் சூழப்பட்டதாகும். இவ்வுலகில் தொண்ணூற்றேழு விழுக்காடு உப்புத் தண்ணீர், மூன்று விழுக்காடு மட்டுமே நல்ல தண்ணீர். அவற்றில் இரண்டு விழுக்காடு துருவங்களிலும் தொலையாழத்திலும் மறைந்துவிடுகிறது. மீதி ஒரு விழுக்காடு இருக்கும் தண்ணீரில்தான் நாம் உயிர் வளர்க்கவும், விவசாயம் செய்யவும், தொழில் செய்யவும் வேண்டும். ஆதலால், நீரினை எந்தளவிற்குப் பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை மனிதர்கள் சிந்திக்க வேண்டும் என்கிறார் கவிஞர்.

**கவிஞரின் கண்டிப்பும் அறிவுரையும்**

நல்ல நீரை மாசுபடுத்திவிட்டால் குடிப்பதற்கு எந்த நீரைக் குடிக்கமுடியும். உணவுப் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கோதுமையை இறக்குமதி செய்தோம். ஆனால், அதைப்போன்று தண்ணீரை இறக்குமதி செய்ய முடியாது. பூமியைத் தவிர வேறு எந்த நீர்க்கோளமும் இல்லை. சூரியக்குடும்பத்தில் உள்ள ஏழு கோள்களும் பாழும் பாறைகளாக இருக்கிறது என்பதை,

"**தண்ணீரையெல்லாம்**

**நஞ்சூட்டிவிடில்**

**மாற்று பானமாய்**

**ஏதருந்துவாய்?**

**பூமியைத் தவிர**

**நீர்க்கோள் உண்டா?**

…………………….

**தொலையாடிக்கெட்டிய**

**தொலைவு மட்டும்**

**தண்ணீர்க்கோள் ஏதுமில்லை**

**சூரியக் குடும்பத்தில்**

**ஏழு கோள்களும்**

**பாழும் பாறைகள்.**"[22]

மேற்காணும் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. இறக்குமதி செய்யமுடியாத ஒரு பொருள் தண்ணீர். பூமியைத் தவிர வேறு எந்தக்கோள்களிலும் தண்ணீர் இருப்பதாக இதுவரை அறிவியல் கண்டுபிடிப்பில்லை என்பதை கவிஞர் தமது கவிதையடிகளில் நடப்பியல் உண்மைகளை எடுத்துரைத்துள்ளார். தண்ணீரை நஞ்சாக மாற்றும்போது கடல் நீரினை முகர்ந்துகொண்டு போகும் மேகம் மீண்டும் மண்ணிற்குத் திரும்ப வரவில்லை என்றால் உலகில் மூன்று பங்குள்ள கடல் வளமும் குன்றிவிடும் என்று எச்சரிக்கை செய்கிறார் பெருநாவலர். இதனை,

"**நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**

**தான்நல்கா தாகி விடின்.**"[23]

என்னும் குறட்பா சான்றுபகர்கின்றது.

முடிவுரை

நீரின் இன்றியமையாமை குறித்தும் குடிதண்ணீரின் முக்கியத்துவத்தைப் பற்றியும் கவிஞர் நயமுற எடுத்துரைக்கிறார். மனிதர்கள் நதிகளில் கிணறுகளில் குளங்களில் சாக்கடைகளையும் தொழிற்சாலைக் கழிவுகளையும் இரசாயனத்தையும் கலக்கச்செய்து தண்ணீரை மாசுபடுத்துதை வைரமுத்து தமது 'மகா கவிதை' என்ற நூலில் இடம்பெற்றுள்ள 'நீர்' கவிதையின் வாயிலாகக் காட்சிகளைக் கண்முன் கொண்டுவந்து எச்சரிக்கையும் விடுக்கின்றார்.

அதுமட்டுமல்லாமல் நமக்கு இருக்கின்ற மூன்று விழுக்காடு நல்ல தண்ணீரில் ஒரு விழுக்காடு தண்ணீரை மட்டுந்தான் எளிதாக நாம் பயன்படுத்தக்கூடிய அளவில் இருக்கிறது. அதனால், குடிநீரை மானிடக்கூட்டம் மாசுபடுத்தினால் எதிர்காலத்தில் எந்நீரைக் குடிக்கமுடியும் என்று வசைபாடி சிந்திக்கவும் வைக்கிறார்.

அதுபோல திருவள்ளுப்பெருமானும் திருக்குறள் பாயிரத்தில் இடம்பெற்றுள்ள 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தில் மழையின் சிறப்பினை எடுத்தியம்புகிறார். அதனால், கணினியுகத்தில் வாழ்கின்ற நாம் நீர்

நிலைகளை மாசுபடுத்தாமல் சிந்துத்துச் செயல்படவேண்டும் என்பது கவிஞரின் சாடலாகவும் வேண்டுகோளாகவும் அமைவதைக் கவிதையடிகளில் காணமுடிகின்றது.

**குறிப்புகள்**:

1. wikipedia.org.
2. wikipedia.org.
3. wikipedia.org.
4. wikipedia.org.
5. வைரமுத்து. மகாகவிதை, ப.75
6. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.4.
7. வைரமுத்து. மகாகவிதை, ப.76
8. மேலது. ப.81
9. மேலது., ப.81
10. மேலது., ப.83
11. மேலது., ப.83
12. மேலது., ப.83
13. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.4.
14. வைரமுத்து. மகாகவிதை, ப.95
15. மேலது., பக்.96-97.
16. மேலது., ப.98
17. மேலது., ப.97
18. மேலது., ப.98
19. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.4.
20. வைரமுத்து. மகாகவிதை, ப.99
21. மேலது., பக்.99-100.
22. மேலது., பக்.100-101.
23. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.5.

**துணைநூற்பட்டியல் :**


1. வைரமுத்து, ஜனவரி 2024. மகா கவிதை, சூர்யா லிட்ரேச்சர் (பி)லிட், சென்னை – 600090,
2. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அக்.2012, திருக்குறள், தாமரை பதிப்பகம், 41-பி சிட்கோ தொழிற்சாலை, அம்பத்தூர், சென்னை-600050.
3. Wikipedia.org.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *X*, பதிப்பு *23*, ஜனவரி – ஜீன் 2026
*Formally UGC Approved Journal (64089), © Author*

# கவிஞர் பழநிபாரதி கவிதைகளில் சமகாலச் சிக்கல்களும் தீர்வுகளும்

**செ. தங்கராஜ்**
தமிழ்த்துறைத் தலைவர்
கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

**ஆய்வுச்சுருக்கம்**

*புதுக்கவிதை உலகில் தமக்கெனத் தனித்துவமான முத்திரையைப் பதித்தவர் கவிஞர் பழநிபாரதி. காதல் கவிதைகள் வழி பரவலாக அறியப்பட்டாலும், அவருடைய படைப்புகள் சமகாலச் சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களையும், அதனால் ஏற்படும் மனித மன நெருக்கடிகளையும் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளன. இக்கட்டுரை, பழநிபாரதியின் கவிதைகளில் வெளிப்படும் சமகாலச் சிக்கல்களையும், அவற்றுக்கு அவர் முன்வைக்கும் தீர்வுகளையும் பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

## முன்னுரை

நவீனத் தமிழ் கவிதை உலகில் தனக்கென ஒரு தனித்துவமான முத்திரையைப் பதித்தவர் கவிஞர் பழனிபாரதி. காதல் நிகழ்வுகளையும், கற்பனைக் கதைகளையும் எழுதுவதோடு நில்லாமல், தன் பேனா முனையைக் காலத்தின் சக்கரத்தில் சாட்சியாக மாற்றிக் காட்டுபவர். 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில், 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்ச்

சமூகம் சந்தித்த, சந்தித்துக் கொண்டிருக்கிற பல்வேறு வாழ்வியல் மாற்றங்களான சாதி, சீர்திருத்தம், வரதட்சனைக்கொடுமை போன்ற சிக்கல்களையும் இவரது பாடல்களில் சமகாலச் சிக்கல்களைத் களைந்து தீர்வு காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**சாதி**

எத்தனையோ கவிஞர்கள், அரசியல்வாதிகள், சமூக சீர்திருத்தவாதிகள் வந்தாலும் ஒன்றே ஒன்றை மட்டும் மாற்ற இயலவில்லை என மனம் வெதும்புகிறார் பழநிபாரதி. காதல் என்பது சாதி பார்த்து வருவதில்லை இரு உள்ளங்கள் இணைந்ததே காதல். அப்படிப்பட்ட காதல் சாதிகளுக்கு முன்னர் பலியிடும் கிடாய் போன்று நிற்கிறது என சாதிய ஆணவக் கொலைகள் பற்றி,

**"சாதிகளின் முன்னால்**
**இந்தக்**
**காதல்**
**ஒரு**
**பலிகடாவைப் போல்**
**பாவமாய் நிற்கிறது!"**[1]

என்கிறார் கவிஞர். காதல் திருமணங்களுக்கு இடையூராக இருக்கும் அனைத்தும் களைந்திட நாம் இன்றிலிருந்து போராடுவோம் என்பதை,

**"சாதிகளை எரிக்க**
**நாம் கொளுத்தும்**
**அந்தத் தீப்பந்த**
**வெளிச்சத்தில்...**
**காதல் வானம்**
**நடுப்பகலாய்**
**வெளுத்திருக்கும்"**[2]

என்கிறார். சாதி மதம் கடந்தது காதல் என்று நான் மார்தட்டிக் கொண்டிருக்கும் போது சாதி மாறிய காதலால் ஆணவக் கொலைகளும் நாட்டில் நடைபெறுகின்றது என மனம் நொந்து போகிறார் கவிஞர். சுவாதி

மற்றும் ராம்குமார் ஆகியோரின் இறப்பு குறித்தும் தனது சினத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**"கொலைக்கும் தற்கொலைக்குமிடையில்**
**அவன் உறங்கிவிட்டான்**
**உண்மைக்கும் பொய்மைக்குமிடையில்**
…………………………….
**அதன் இருள்**
**நீதிமன்றம் போகும் வழியெங்கும்**
**பரவிக்கிடந்ததைப் பார்த்திருக்கக்கூடும்**
**இருளுக்கும் வெளிச்சத்திற்குமிடையில்**
**அவனது நிழலும் உறங்கிவிட்டது"**[3]

உத்திரப்பிரதேசத்தில் 30.05.2024 அன்று இரு சிறுமிகள் உயர் சாதியினரால் வன்புணர்வு செய்யப்பட்டு மாமரத்தில் தொங்கவிட்டிருந்த நிகழ்வு நாட்டையே உலுக்கியது.

**"தள்ளி நின்று வேடிக்கை பாருங்கள்**
**இந்த மரத்தின் நிழல்**
**சாதியின் ரத்தம்**
**வன்புணர்வின் துக்கம்"**[4]

அவ்வாறு நிகழ்ந்ததை வன்மையாகக் கண்டிக்கும் அவர், அம்மாமரம் காளிதேவி போல் முடி கலைந்து, நகம் வளர்ந்து, முகம் சினந்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்கிறார்.

**வரதட்சணைக் கொடுமை**

இரு மனங்களின் இணைவு திருமணம். இரு வீட்டாரின் ஒப்புதலோடு முறைப்படி திருமணங்கள் நடைபெறுவது உண்டு. இதில், குறிப்பாக மணமகள் வீட்டார் மணமகன் வீட்டிற்கு தன் பெண்ணுடன் சேர்த்து பொன்னும், பொருளையும் தருகின்றனர். ஆனால், ஒரு சில இடங்களில் இது மணமகன் வீட்டினரால் மணமகள் வீட்டினர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குச் சென்ற

பெண்ணிடம் வரதட்சணை கேட்டு சித்தரவதை செய்கிறார்கள். இதனை எதிர்த்துக் கேட்ட அப்பெண்ணை தீயிட்டு கொளுத்திய நிகழ்வை,

**“சௌகரியங்களுக்கு மட்டுமே**
**பயன்படுத்திக் கொள்ள**
**பெண்களென்ன**
**சீட்டாத்தில் கிடைத்த**
**ஜோக்கர்களா?**
**இந்தக் கேள்விக்கணைகளுக்காக**
**அவள்**
**வாதாடும் போதுதானே**
**தீ…**
**அவள்மீது விளையாடியது…”**[5]

எனக்கூறும் பழநிபாரதி, இந்தத் தீயே இறுதியாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். மேலும், சமுதாய மக்களிடம் இருக்கும் இப்பழக்கவழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதை,

**“எரியும் அவளது**
**சடலத் தீ**
**குருட்டுச் சமுதாயத்திற்குக்**
**கொள்ளி வைக்கட்டும்”**[6]

எனக் கூறுகிறார். ஒரு சில பெண்களுக்கு வரதட்சணை கொடுக்க இயலாததால் திருமணமே நடைபெறாமல் போகிறது என்கிறார்.

**“இறகுகள் உதிர்த்தபடி**
**மேகங்களுக்கும் மேலே**
**சிறகடிக்கும்**
**அவளது கல்யாணப் புறாவை**
**வரதட்சணைக் கழுகுகள்**
**இன்னும் விரட்டுகின்றன”**[7]

இதனால் அவர்கள் காவியாடை அணிந்துள்ளதை,

**“கல்யாணத்திற்காக**

**கண்ணீர்த்தவம் இருந்தவளுக்கு**

**கடைசியில்**

**மோட்சம் கிடைத்தது**

**காவியாடையில்**"[8]

எனவும்,

"**வரதட்சணையால்**

**சபிக்கப்பட்ட**

**முதல் முதற்கண்ணி**

**மாதவிலக்கும் நின்று போனதை**

**யாரிடம் சொல்லியிருப்பாள்**"[9]

எனவும் சமூகத்தில் புரையோடியுள்ள வரதட்சணையை நினைத்து மனம் வெதும்புகிறார் கவிஞர்.

**சீர்திருத்தம்**

1980-இல் நாராயண்பூர் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த காவல்துறையினர் அங்கிருந்த பெண்களை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கினர். அப்பாவிப் பொதுமக்களைத் துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கினர்.

"**அப்பாவிகளுக்கு**

**மரணச் சுருக்குப் போட்ட**

**துப்பாக்கிகளின் துஷ்பிரயோகம்**"[10]

மேலும், இந்த வழக்கில் உரிய நீதி கிடைக்காததை எண்ணி வேதனைப்படுகிறார்.

"**நீதி தேவதையே!**

**நீ** –

**நித்திரையில்**

**இருப்பதாய்த்தான்**

**இதுவரையும் நினைத்திருந்தோம்**...

**நீ** –

**விலை**

**மகளானது**

**எப்போது...?”**[11]

எனக் கடுமையாக நீதிபதிகளையும் நீதித்துறையினையும் சாடுகிறார். ஒரே ஒரு வெள்ளைத்தாள் மூலமாக நாட்டில் நடைபெறும் அவலங்களை மாற்ற இயலும் என்கிறார் கவிஞர். காதலின் பேரில் பெண்களின் முகத்தில் வீசப்படும் திரவ வீச்சு, விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மீத்தேன் எரிவாயு குழாய், இலங்கை ராணுவத்தால் நமது மீனவர்கள் தாக்கப்படும் நிகழ்வு அரசியல்வாதிகளின் சொத்து விபரம் போன்றவற்றை காகிதத்தால் வெளிக்கொணர முடியும். ஆனால், அதையெல்லாம் இச்சமூகம் மாற்றிவிடும் என்பதை,

**“நம் அரசியல்வாதிகளின்**

**அசல் சொத்துக்கணக்குகளை**

**இதில் அச்சடிக்கலாம்**

**இறையாண்மைக்கு எதிராக**

**கைது செய்யப்பட்டால்**

**நான் என்ன செய்ய முடியும்”**[12]

எனக் கூறுகிறார்.

**தொகுப்புரை**

- சமூகம் என்பது தனிப்பட்ட மனிதன் இணைந்து வாழும் முறை என்றும், சமுதாயம் என்பது அவ்வாறு இனைந்து வாழும் மனிதர்களின் கடமைகளைக் கூறுவதாகவும் விளக்கப்பட்டுள்ளது.
- சாதி மதம் கடந்தது காதல் என்று நான் மார்தட்டிக் கொண்டிருக்கும் போது சாதி மாறிய காதலால் ஆணவக் கொலைகளும் நாட்டில் நடைபெறுகின்றது என மனம் நொந்து போகிறார் கவிஞர்.
- சுவாதி மற்றும் ராம்குமார் ஆகியோரின் இறப்பு குறித்தும் தனது சினத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
- காதலின் பேரில் பெண்களின் முகத்தில் வீசப்படும் திரவ வீச்சு, விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மீத்தேன் எரிவாயு குழாய், இலங்கை ராணுவத்தால் நமது மீனவர்கள் தாக்கப்படும் நிகழ்வு அரசியல்வாதிகளின்

சொத்து விபரம் போன்றவற்றை காகிகத்தால் வெளிக்கொணர முடியும். ஆனால், அதையெல்லாம் இச்சமூகம் மாற்றிவிடும் என்பதையும் சாடியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. பழநிபாரதி., நெருப்புப் பார்வைகள், ப.13
2. மேலது, ப.14
3. பழநிபாரதி., படிமங்கள் உறங்குவதில்லை, ப.51
4. பழநிபாரதி., சூரியனுக்குக் கீழ் ஒரு வெள்ளைக் காகிதம், ப.20
5. பழநிபாரதி., நெருப்புப் பார்வைகள், ப.18
6. மேலது, ப.18-19
7. மேலது, ப.52
8. மேலது, ப.53
9. பழநிபாரதி., காதலின் பின் கதவு, ப.31
10. பழநிபாரதி., நெருப்புப் பார்வைகள், ப.25
11. மேலது, ப.25
12. பழநிபாரதி., சூரியனுக்குக் கீழ் ஒரு வெள்ளைக் காகிதம், ப.64

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *X*, பதிப்பு *23*, ஜனவரி – ஜீன் 2026
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சங்க இலக்கியத்தில் மருத்துவம்

**முனைவர் ப. மோகனசுந்தரி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை பண்டைத் தமிழர் வாழ்வியலைப் பல கோணங்களில் சித்திரிக்கிறது. போர், வீரம், காதல், இயற்கை எனப் பல்வேறு பரிமாணங்களைப் பேசும் இப்பாடல்களில், நேரடியாக மருத்துவ நூல்களாக இல்லாவிட்டாலும், சங்க காலத் தமிழரின் உடல்நலம், நோய் குறித்த புரிதல், சிகிச்சை முறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், சுகாதாரம் பற்றிய குறிப்புகள் சிதறிக்கிடக்கின்றன. இக்கட்டுரை, சங்க இலக்கியங்களில் காணப்படும் இத்தகைய குறிப்புகளைத் தொகுத்து, சங்கத் தமிழரின் மருத்துவ அறிவின் அடிப்படைத் தன்மைகளை ஆராய்கிறது. குறிப்பாக, மூலிகைகளின் பயன்பாடு, காயம் மற்றும் நோய்களுக்கான பரிகாரங்கள், மனநலம் குறித்த பார்வையைக் காட்டும் காதல் மற்றும் பிற உணர்வு நிலைகள், உணவு மற்றும் சுற்றுப்புறத்தின் முக்கியத்துவம் ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இக்குறிப்புகள், சங்க கால மருத்துவ அறிவு பெரும்பாலும் நடைமுறை சார்ந்ததாகவும், இயற்கையோடு இணைந்ததாகவும், அனுபவ அறிவின் அடிப்படையிலானதாகவும் இருந்ததைக் இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.*

**முன்னுரை**

சங்க இலக்கியம் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகுப்புகளாகக் கிடைக்கும் சங்கப் பாடல்கள், அக்கால மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு வாழ்வைப் பற்றிய விலைமதிப்பற்ற தகவல்களை அளிக்கின்றன. ஆயினும், இப்பாடல்கள் நேரடியாக ஏதேனும் ஒரு துறையின் விரிவான விளக்கவுரைகளாக எழுதப்படவில்லை. இவை கவிதை வடிவிலான வாழ்வியல் சித்திரங்கள். எனவே, சங்க கால மக்களின் மருத்துவ அறிவு குறித்த நேரடி மருத்துவ நூல்கள் கிடைக்கப் பெறாவிட்டாலும், இலக்கியங்களில் ஊடும்பாவுமாக வரும் குறிப்புகளின் மூலம் அக்கால மக்களின் உடல்நலம் குறித்த பார்வை, நோய் பற்றிய புரிதல், சிகிச்சை முறைகள் பற்றி அறிய முடிகிறது. இந்த ஆய்வு, சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் மருத்துவ அறிவு தொடர்பான குறிப்புகளை அடையாளம் கண்டு, அவற்றின் மூலம் அக்கால மருத்துவப் புரிதலை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சங்கத் தமிழரின் மருத்துவ அறிவு என்பது தனித்த ஒரு துறையாக இருந்தது. அன்றாட வாழ்வியல் நடைமுறைகளின் ஒரு பகுதியாக மருத்துவம் இருந்தது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**சங்க இலக்கியத்தில் நோய் பற்றிய பார்வை**

சங்க இலக்கியங்களில் நோய்களைப் பற்றிய நேரடிக் குறிப்புகள் அரிது என்றாலும், சில இடங்களில் உடல்நலக் குறைபாடுகள், காயங்கள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. நோய்கள் பெரும்பாலும் இயற்கையான காரணிகளால் வருபவையாகவோ, அல்லது சில சமயங்களில் தெய்வீகக் காரணிகளுடன் தொடர்புபடுத்தியோ பார்க்கப்பட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, போர்க்களக் காயங்கள், முதுமை காரணமாக வரும் தளர்ச்சி (புறநானூறு பல பாடல்களில்), பசி (பெரும்பாணாற்றுப்படை), காலநிலை மாற்றம் (மழை, வெயில்), மற்றும் சில அறியப்படாத உடல் உபாதைகள் ஆகியவை பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

குறிப்பாக, மனநலம் சார்ந்த "நோய்" பற்றிய புரிதல் சங்க இலக்கியத்தில் ஆழமாகப் பதிவாகியுள்ளது. காதல் நோய் (காமக்கலக்கம், மடலேறுதல்)

என்பது உடல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் ஒரு நிலையாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. தலைவன் அல்லது தலைவியைப் பிரிந்த பிரிவுத் துயரம், உடலை மெலிதாக்குவது, பசலையை ஏற்படுத்துவது போன்ற உடல் ரீதியான அறிகுறிகளை ஏற்படுத்துவதாகப் பல அகத்திணைப் பாடல்கள் கூறுகின்றன . இதனை குறுந்தொகை, நற்றிணை பாடல்கள் வழி அறிய முடிகிறது. இது மனநிலைக் கலக்கத்திற்கும் உடல்நலத்திற்கிடையேயான தொடர்பை அக்கால மக்கள் உணர்ந்திருந்ததைக் காட்டுகிறது .

**சிகிச்சை முறைகளும் மூலிகைப் பயன்பாடும்**

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் சிகிச்சை முறைகள் பெரும்பாலும் எளிமையானவையாகவும், இயற்கையைச் சார்ந்தவையாகவும் உள்ளன.

**மூலிகைப் பயன்பாடு:**

பல பாடல்களில் குறிப்பிட்ட தாவரங்கள் குறிப்பிடப்படுகின்றன. சில தாவரங்களுக்கு மருத்துவப் பயன்கள் இருந்திருக்கலாம் என்ற அனுமானம் உண்டு. எடுத்துக்காட்டாக, வேம்பு கசப்புத் தன்மைக்காகவும், அதன் நிழலில் தங்கினால் புத்துணர்ச்சி கிடைக்கும் என்பது போன்ற குறிப்புகள் (ஐங்குறுநூறு) அதன் மருத்துவம் அல்லது சுகாதார முக்கியத்துவத்தை உணர்த்தலாம். சில சங்கப் பாடல்களில், காயம்பட்ட இடத்திற்குப் பூசப்படும் பசை போன்ற பொருட்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்தாக இருக்கலாம் (புறநானூறு 201). நீர்நிலைகளைப் பற்றிய வருணனைகள், நீராடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன, இது உடல் சுத்தத்துடன் தொடர்புடையது.

**காயங்களுக்கான சிகிச்சை:**

போர்க்களக் காயங்கள் பற்றிப் புறநானூற்றில் பல குறிப்புகள் உள்ளன. ஆயினும், விரிவான அறுவை சிகிச்சை முறைகள் பற்றித் தெளிவான குறிப்புகள் இல்லை. எளிய காயங்களுக்குச் சில வகையான மருந்துகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எலும்பு முறிவுகளைச் சரிசெய்வது போன்ற சில அடிப்படைச் சிகிச்சைகள் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால், இலக்கியம்

இவற்றை விரிவாகப் பேசுவதில்லை; அவை பெரும்பாலும் காயத்தின் வீரம் சார்ந்த பார்வையிலேயே அமைந்துள்ளன.

**தெய்வீகப் பரிகாரங்கள்:**

சில நோய்கள் அல்லது துன்பங்கள் தெய்வீகச் சினத்தாலோ, ஆவியின் பாதிப்பாலோ வருகின்றன என்ற நம்பிக்கை இருந்திருக்கலாம். அதற்கான பரிகார முறைகளாக, வேலன் வெறியாட்டு போன்ற சடங்குகள் பற்றிய குறிப்புகளும் அகத்திணைப் பாடல்களில் காணப்படுகின்றன. இருப்பினும், இது மருத்துவ அறிவின் பகுதியாக இல்லாமல், நம்பிக்கை சார்ந்த ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும்.

**உணவு மற்றும் சுகாதாரத்தின் பங்கு**

சங்க இலக்கியத்தில் உணவுப் பழக்க வழக்கங்கள், வேளாண்மை, வேட்டை, மீன்பிடித்தல் ஆகியவை விரிவாகப் பேசப்படுகின்றன. பல்வேறு வகையான உணவுகள், தானியங்கள், காய்கறிகள், பழங்கள், இறைச்சிகள் பற்றிக் குறிப்புகள் உள்ளன. நல்ல உணவு என்பது உடல்நலத்துக்கு அடிப்படை என்பதை அக்கால மக்கள் அறிந்திருந்தனர் என்பதை இவை உணர்த்துகின்றன. "பசிப்பிணி மருத்துவன்" என உணவைக் குறிப்பிட்டது (மணிமேகலை – சங்க மருவிய காலம்), உணவுக்கும் உடல் நலத்திற்கும் உள்ள தொடர்பைப் பிற்காலத்திலும் வலியுறுத்தியது.

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பற்றிய நேரடிக் குறிப்புகள் இல்லை என்றாலும், குடியிருப்புகள், நீர்நிலைகள் பற்றிய வருணனைகள் அக்கால வாழ்வியல் முறைகளைப் படம் பிடிக்கின்றன. நீராடுவது, தூய்மையான சூழலில் வாழ்வது போன்றவற்றை வாழ்வின் இயல்பான கூறுகளாகக் கருதியிருக்கலாம்.

**மருத்துவம் செய்தவர்கள்**

சங்க இலக்கியத்தில் நேரடியாக "மருத்துவர்" என்ற பட்டம் பெற்றவர்கள் பற்றிய தெளிவான குறிப்புகள் இல்லை. இருப்பினும், சிலப்பதிகார உரையில் "பாடினி கைவழி மருத்துவம்" என்ற குறிப்பு வருகிறது. இது பாடல்கள் பாடி மனநோய்களுக்குச் சிகிச்சை அளித்தல் அல்லது கைகளால் தொட்டு வருடி குணப்படுத்துதல் போன்ற முறைகள்

இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது (சிலப்பதிகாரம், கடலாடு காதை, நச்சினார்க்கினியர் உரை). அன்றாட நோய்களுக்குத் தேவையான அடிப்படை மருத்துவ அறிவு குடும்பங்களுக்குள்ளோ, அல்லது குறிப்பிட்ட மூலிகைகளைப் பற்றிய அறிவுடையவர்களிடமோ இருந்திருக்கலாம். இது ஒரு மரபுவழி மருத்துவமாக, வீட்டளவில் அல்லது சமூக மட்டத்திலேயை இருந்திருக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதை காட்டுகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் மருத்துவ நூல் குறிப்புகளும் உள்ளன. சங்கக் காலத் தமிழரின் மருத்துவ அறிவு குறித்த ஒரு சித்திரத்தை நாம் பெற முடிகிறது. அவர்களின் மருத்துவ அறிவானது பெரும்பாலும் நடைமுறை சார்ந்ததாகவும், இயற்கையான மூலிகைகள் மற்றும் வழிமுறைகளைச் சார்ந்ததாகவும் இருந்திருக்கிறது. நோய்களை உடல், மனம் இரண்டும் சார்ந்தவையாகப் பார்த்த அணுகுமுறை (குறிப்பாகக் காதல் நோய்), உணவு மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் பற்றிய புரிதல் ஆகியவை கவனிக்கத்தக்கவையாக உள்ளன.

சங்கத் தமிழரின் மருத்துவப் புரிதல், பின்னாளில் சித்த மருத்துவம் போன்ற செழுமையான மருத்துவ மரபுகள் தோன்றியதற்கு ஒரு வலுவான அடித்தளமாக இருந்திருக்கலாம். சங்க இலக்கியக் குறிப்புகள், அக்கால மக்கள் தங்களின் உடல்நலத்தையும், அன்றாட வாழ்வியலையும் பிரிக்க முடியாத ஒன்றாகவே பார்த்தனர் என்பதைக் காட்டுகிறது. இந்த ஆய்வின் மூலம், சங்க இலக்கியத்தின் மருத்துவக் குறிப்புகள், அக்காலச் சமூகம் பற்றிய நமது புரிதலை ஆழப்படுத்த உதவுகின்றன.

**சான்றென் விளக்கம்**

1. சோம இளவரசு - *சங்க காலத் தமிழர் வாழ்வியல்* , உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1995.
2. க.கண்ணன் - *சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்*, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.
3. குறுந்தொகை. உ.வே. சாமிநாதையர் பதிப்பு.
4. நற்றிணை. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரை.

5. புறநானூறு. உ.வே. சாமிநாதையர் பதிப்பு.
6. சங்க இலக்கியம் - எட்டுத்தொகை பத்துப்பாட்டு மூலமும் உரையும்.
7. ந.சுப்பிரமணியன் - *சங்க காலத் தமிழகம்* , நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
8. பாக்கியமேரி - தமிழ் இலக்கிய வரலாறு - நியு செஞ்சுரி புக் ஹவுஸ் 2013.
9. கா.கோ. வேங்கட்ராமன் - தமிழ் இலக்கிய வரலாறு – பாரி நிலையம் 2024.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி X, பதிப்பு 23, ஜனவரி – ஜீன் 2026
Formally UGC Approved Journal (64089), © Author

# வைரமுத்து புதினங்களில் மாந்தர்கள்

**இரா. உமாதேவி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

**ஆய்வுச் சுருக்கம்**

*கவிப்பேரரசு வைரமுத்து தமிழ் இலக்கிய உலகில் கவிஞராக மட்டுமன்றி, சிறந்த நாவலாசிரியராகவும் தடம் பதித்தவர். இவருடைய நாவல்களான கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப் போர் ஆகிய படைப்புகளில் தோன்றும் கதைமாந்தர்கள் வெறும் கற்பனை வடிவங்கள் அல்ல, அவர்கள் மண்ணின் மனிதர்கள். இக்கட்டுரை, வைரமுத்துவின் நாவல்களில் வரும் முதன்மை, துணை மற்றும் எதிர்நிலைக் கதைமாந்தர்களின் வாழ்வியல் போராட்டங்கள், பெண்ணியச் சிந்தனைகள், வர்க்கப் போராட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவற்றை விரிவாக ஆராய்கிறது. கதைமாந்தர்களின் வழியே ஆசிரியர் சமூகத்திற்கு வழங்கும் செய்திகளை மதிப்பிடுவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.*

## முன்னுரை

தமிழ் நாவல் இலக்கிய வரலாறு என்பது சமூக மாற்றங்களின் காலக்கண்ணாடியாகும். அவ்வகையில், கவிதைக்குரிய மொழியழகோடு நாவல் இலக்கியத்திற்குப் புதிய பரிமாணத்தைத் தந்தவர் வைரமுத்து. மண்ணின் மணத்தையும், எளிய மக்களின் கண்ணீரையும்,

உலகமயமாக்கலின் பேராபத்தையும் தமக்கே உரிய தனித்துவமான பாணியில் நாவலாக்கியுள்ளார். ஒரு நாவலின் வெற்றி என்பது அதில் உருவாக்கப்படும் கதைமாந்தர்களின் நம்பகத்தன்மையிலும், அவர்கள் வாசக மனங்களில் ஏற்படுத்தும் தாக்கத்திலும் தான் அடங்கியுள்ளது. வைரமுத்துவின் படைப்புகளில் நடமாடும் மனிதர்கள் தங்களின் தனித்துவமான பேச்சுவழக்கு, பண்பாடு மற்றும் உணர்வுப் போராட்டங்களால் தமிழ் நாவல் உலகில் அழியா இடம் பெற்றுள்ளனர். இக்கட்டுரை, அவரது நாவல்களின் கதைமாந்தர்களைப் பன்முக நோக்கில் பகுப்பாய்வு செய்கிறது.

**மண்ணும் மாந்தர்களும்**: வைரமுத்துவின் நாவல்களில் மிக முக்கியமான அம்சம், அவை குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பையும், அந்த நிலத்தைச் சார்ந்த மனிதர்களையும் அச்சு அசலாகப் பிரதிபலிப்பதாகும். குறிப்பாக தேனி, பெரியகுளம் வட்டாரத்து வைகைக்கரை நாகரிகத்தையும், கரிசல்-வறண்ட நிலத்து மனிதர்களையும் அவர் செதுக்கியுள்ளார்.

கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலின் நாயகன் பேயத்தேவன், வைகை அணை கட்டுமானத்திற்காகத் தன் நிலங்களை இழந்து, சொந்த மண்ணிலேயே அகதியாக மாறும் எளிய விவசாயிகளின் பிரதிநிதி. நிலத்தோடு கொண்ட தொப்புள்கொடி உறவை வைரமுத்து பேயத்தேவன் மூலம் காட்டுகிறார்.

**"பூமிக்கும் அவனுக்கும் உள்ள உறவு வெறும் சொத்துரிமை சம்பந்தப்பட்டது மட்டுமல்ல; அது ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள பிரிக்க முடியாத ரத்த பந்தம்."**

**(கள்ளிக்காட்டு இதிகாசம், பக். 42)**

மண்ணின் வறட்சியைத் தன் வாழ்நாள் முழுக்கச் சுமக்கும் மனிதர்களின் வறண்ட, அதே சமயம் பாசம் மிக்க உள்ளங்களை இவரது மாந்தர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

**பெண்ணியக் குறியீடுகள்**: தமிழ் நாவல் வரலாற்றில் வைரமுத்துவின் பெண் கதாபாத்திரங்கள் மிக உன்னதமான இடத்தைப் பெறுகின்றனர். அவர்கள் அடங்கிப் போகும் பலவீனமானவர்கள் அல்ல, துயரக் கடலை நீந்திக் கடக்கும் ஆளுமைகள்.

**கருவாச்சி (கருவாச்சி காவியம்)**

கருவாச்சி காவியம் நாவலின் நாயகி கருவாச்சி, தமிழ் கிராமத்து உழைக்கும் பெண்களின் ஒட்டுமொத்த வடிவம். கணவனால் கைவிடப்பட்டு, சமூகப் பழிகளுக்கு ஆளாகி, மாட்டு வண்டி ஓட்டியும், உழைத்தும் தன் மகனைக் வளர்க்கும் அவளது வீரம் போற்றத்தக்கது.

**"பொம்பள அழுகுறது பலவீனம் இல்லடா… அழுது முடிச்ச உடனே அவளுக்குள்ள முளைக்குற வீரியம் இருக்கே, அதை எந்த ஆம்பளையாலயும் தாங்க முடியாது."**

**(கருவாச்சி காவியம், பக். 115)**

என கருவாச்சியை அழகாக வருணித்துள்ளார்.

**வர்க்கப் போராட்டமும் விளிம்புநிலை மனிதர்களும்**

வைரமுத்துவின் நாவல்களில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் விளிம்புநிலை மனிதர்களின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. சாதியக் கொடுமைகளாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும் ஒடுக்கப்படும் மனிதர்களை அவர் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்.

கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலில் வரும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த முத்தையா போன்ற கதாபாத்திரங்கள், உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவதையும், அதற்கு எதிராக அவர்கள் எழுப்பும் தார்மீகக் கோபத்தையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**"வியர்வை சிந்துவது ஒரு ஜாதி, அந்த வியர்வையை விலைக்கு வாங்கிப் பணமாக்குவது இன்னொரு ஜாதி. இந்த விதியை எந்தச் சாமி எழுதியது?"**

**(கள்ளிக்காட்டு இதிகாசம், பக். 189)**

பசி, பஞ்சம், கடன் சுமை ஆகியவற்றால் தற்கொலைக்குத் தள்ளப்படும் விவசாயிகளின் நிலையை இக்கதைமாந்தர்கள் வாசகர்களின் நெஞ்சைக் குடையும் வண்ணம் எடுத்துரைக்கின்றனர்.

**மூன்றாம் உலகப் போர்**

பாரம்பரிய கிராமத்து மனிதர்களை மட்டுமே படைத்த வைரமுத்து, மூன்றாம் உலகப் போர் நாவலில் முற்றிலும் மாறுபட்ட உலகளாவிய, நவீனக் கதைமாந்தர்களைப் படைத்துள்ளார். உலகமயமாக்கல் மற்றும் மென்பொருள்

துறையின் பின்னணியில் இந்நாட்களின் இளைஞர்கள் சந்திக்கும் மன அழுத்தத்தை இது விவரிக்கிறது.

இந்நாவலின் நாயகன் செழியன், உலகமயமாக்கல் என்னும் மாயச் சுழலில் சிக்கித் தவிக்கும் நவீன இளைஞன். கார்ப்பரேட் நிறுவனங்களின் இலக்குகளை (Targets) அடைவதற்காகத் தன் தூக்கத்தையும், நிம்மதியையும் இழக்கும் சமகால இளைஞர்களின் மனசாட்சியாகச் செழியன் வலம் வருகிறான்.

**"பழைய போர்கள் நிலத்துக்காகவும் பெண்ணுக்காகவும் நடந்தன. இந்த மூன்றாம் உலகப் போர்... பசிக்காகவும், கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்துக்காகவும் சாமானிய மனிதனின் ரத்த நாளங்களுக்குள் நடந்து கொண்டிருக்கிறது."**

**(மூன்றாம் உலகப் போர், பக். 75)**

வைரமுத்துவின் நாவல்களில் 'இயற்கை' அல்லது 'நிலம்' என்பது வெறும் பின்னணி மட்டுமல்ல; அதுவே ஒரு முதன்மைக் கதைமாந்தராக வாழ்கிறது. இயற்கையைச் சீரழிக்கும் மனிதர்களுக்கு எதிராக இயற்கை எடுக்கும் விஸ்வரூபத்தை அவர் மனிதர்களின் வழியே பேசுகிறார்.

**பாசமும் பகையும்**

மனித மனங்களின் ஆழமான உணர்வுகளான அன்பு, துரோகம், பழிவாங்குதல், குற்ற உணர்ச்சி போன்றவற்றை வைரமுத்துவின் கதைமாந்தர்கள் வழி உளவியல் பூர்வமாக அணுக முடிகிறது.

கருவாச்சி காவியம் நாவலில் வரும் (கட்டையன்) கருவாச்சியின் கணவன் அறியாமையினாலும் தவறான வழிகாட்டுதல்களினாலும் தன் மனைவியைக் கொடுமைப்படுத்திவிட்டு, இறுதியில் குற்ற உணர்ச்சியால் வெந்து அழியும் உளவியல் மாற்றம் மிக நுட்பமாக விவரிக்கப்பட்டுள்ளது.

**"மனிதன் செய்யும் ஆகப்பெரிய தவற்றிற்குப் பெரிய தண்டனை நீதிமன்றங்கள் தருவதில்லை; அவனது சொந்த மனசாட்சி தரும் குற்ற உணர்ச்சிதான் அவனைக் கொன்று தின்னும்."**

**(கருவாச்சி காவியம், பக். 310)**

பாசத்திற்கும் பகைக்கும் இடையே ஊசலாடும் மனித மனதின் விசித்திரங்களை இவரது துணைக்கதாபாத்திரங்களான கிழவிகள், நாட்டாமைக்காரர்கள் வழி அறியலாம்.

**மொழி நடை**

கதைமாந்தர்களின் தகுதி, வாழும் சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப உரையாடல்களை அமைப்பதில் வைரமுத்து வல்லவர். கிராமத்து மனிதர்களுக்கு வட்டார வழக்கையும், நகரத்து மாந்தர்களுக்கு ஆங்கிலம் கலந்த நவீன வழக்கையும் கையாண்டுள்ளார்.

பழமொழிகள், சொலவடைகள், கிராமத்துப் பாடல்கள் ஆகியவற்றைக் கதைமாந்தர்கள் பேசுவதாக அமைத்திருப்பது நாவலுக்கு யதார்த்த வடிவைக் கொடுக்கிறது.

**"அடிநாக்கில் நஞ்சிருந்தா அமுதும் கசக்கும்பாங்க... மனசுல வஞ்சமிருந்தா மனுசப் பிறப்பே கசந்து போகும்டா மகனே!"**

**(கள்ளிக்காட்டு இதிகாசம், பக். 215)**

இந்த உரையாடல் உத்திகள் கதைமாந்தர்களின் குணாதிசயங்களை வாசகர்களுக்கு எளிதில் கடத்தி விடுகின்றன.

**சமூக மாற்றத்திற்கான குறியீடுகள்**

வைரமுத்துவின் கதைமாந்தர்கள் துயரங்களோடு முடிந்து போவதில்லை. அவர்கள் ஏதோ ஒரு புள்ளியில் விழித்தெழுந்து சமூக மாற்றத்திற்கான விதைகளாக மாறுகிறார்கள்.

மூன்றாம் உலகப் போர் நாவலில் வரும் பெண் கதாபாத்திரம், கார்ப்பரேட் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, மீண்டும் இயற்கை விவசாயத்தை நோக்கித் திரும்பும் நவீனப் பெண்ணின் விழிப்புணர்வாகக் காட்டப்படுகிறாள். துன்பங்களை எதிர்த்துப் போராடி, இறுதியில் வெற்றியடையும் இத்தகைய பாத்திரங்கள் வழியே ஆசிரியர் சமூகத்திற்கு ஒரு நம்பிக்கைச் செய்தியை வழங்குகிறார்.

**முடிவுரை**

கவிப்பேரரசு வைரமுத்துவின் நாவல்களில் வரும் கதைமாந்தர்கள் பற்றிய இவ்வாய்வின் மூலம் பின்வரும் உண்மைகள் புலனாகின்றன:

- இவரது கதைமாந்தர்கள் மண்ணின் எதார்த்த மனிதர்களின் நகல்களாக விளங்குகின்றனர்.
- பெண்ணியக் கதாபாத்திரங்கள் சுயமரியாதையும், பொருளாதாரத் தன்னிறைவும் கொண்டவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.
- விளிம்புநிலை மற்றும் விவசாயக் குடிமக்களின் அவலக்குரலை உலகறியச் செய்யும் ஊடகமாக இக்கதைமாந்தர்கள் செயல்படுகின்றனர்.
- பழைமைக்கும் புதுமைக்கும் இடையிலான பாலமாக இவர்தம் படைப்புகள் திகழ்கின்றன.

சுருங்கக் கூறின், வைரமுத்துவின் பேனா முனையில் உதித்த கதைமாந்தர்கள் தமிழ் நாவல் இலக்கியப் பரப்பில் என்றும் அழியாத, வாழும் மனிதர்களாக உலா வருகிறார்கள் என்பது திண்ணம்.

**சான்றாதார நூல்கள்**

1. வைரமுத்து, கவிப்பேரரசு (2001). கள்ளிக்காட்டு இதிகாசம். சென்னை: சூர்யா பப்ளிகேஷன்ஸ்.
2. வைரமுத்து, கவிப்பேரரசு (2006). கருவாச்சி காவியம். சென்னை: திருமகள் நிலையம்.
3. வைரமுத்து, கவிப்பேரரசு (2012). மூன்றாம் உலகப் போர். சென்னை: சூர்யா பப்ளிகேஷன்ஸ்.
4. சிவத்தம்பி, கா (2010). நாவலும் வாழ்க்கையும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *X*, பதிப்பு *23*, ஜனவரி – ஜீன் 2026
*Formally UGC Approved Journal (64089), © Author*

# மு.மேத்தாவின் 'மரங்கள்' கவிதையில் சூழலியல் நிலை

**சி. அனுப்பிரியா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு.

**ஆய்வுச்சுருக்கம்**

*தற்காலத் தமிழ் இலக்கியப் பரப்பில் வானம்பாடி இயக்கத்தின் வழி புதுக்கவிதைக்குத் தனித்துவமான முகவரியை வழங்கியவர் கவிக்கோ மு.மேத்தா ஆவார். இவரது கவிதைகள் வெறும் சொல்லாடல்கள் அல்ல; அவை சமூகக் காயங்களுக்கு இடப்படும் மருந்துகள். மனிதநேயத்தையும், இயற்கையோடு இயைந்த வாழ்வையும் வலியுறுத்துவது இவரது கவிதைகளின் முதன்மைப் பண்பாகும். இக்கட்டுரை, மு.மேத்தாவின் 'மரங்கள்' என்னும் புகழ்பெற்ற கவிதையை முதன்மைத் தரவாகக் கொண்டு, நவீன மனிதனின் பேராசையால் சிதைக்கப்படும் சுற்றுச்சூழல் சமநிலையை ஆராய்கிறது. மரங்களைச் வெறும் தாவர அமைப்பாகப் பார்க்காமல், தியாகத்தின் உச்சமாகவும், மானுடத்தின் பேராசிரியராகவும் கவிஞர் சித்தரிப்பதை விரிவாகவும் ஆழமாகவும் பகுப்பாய்வு செய்கிறது.*

## முன்னுரை

"இயற்கையோடு இணைந்து வாழ்வதே மனித வாழ்வின் ஆகச்சிறந்த நாகரிகம்" என்பது உலகளாவிய அறம். தமிழ் இலக்கிய மரபு என்பது ஐந்திணை நிலங்களை அடிப்படையாகக் கொண்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலங்களை வகைப்படுத்திய தமிழன், அந்த

நிலங்களின் ஆன்மாவாக மரங்களையும் செடிகொடிகளையும் தாவரங்களையுமே கருதினான். சங்க இலக்கியங்கள் காட்டும் மனிதன் இயற்கையைத் தொழுது வாழ்ந்தான்; மரங்களைத் தன் உடன்பிறப்பாகக் கருதினான் (நற்றினையில் வரும் "விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி..." என்ற பாடலில் புன்னை மரத்தைத் தனக்கு அக்காள் என்று கூறும் தலைவியின் கூற்று இதற்குச் சான்று).

ஆனால், அறிவியல் தொழில்நுட்பமும், நகரமயமாதலும் பெருகிவிட்ட நவீன காலகட்டத்தில், மனிதன் இயற்கையைத் தன் அடிமையாக, நுகர்வுப் பொருளாக மட்டுமே பார்க்கத் தொடங்கினான். கான்கிரீட் காடுகளை உருவாக்குவதற்காகப் பச்சைக் காடுகளை இரக்கமின்றிக் கொன்று குவித்தான். இத்தகைய சூழலியல் பேரழிவையும், மனிதனின் நன்றியற்ற போக்கையும் கண்டு உதிர்ந்த கவிஞனின் கண்ணீர்தான் மு.மேத்தாவின் 'மரங்கள்' கவிதை. இக்கவிதை வெறும் வர்ணனை அல்ல; மனித மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டும் ஒரு தத்துவக் கோட்பாடு ஆகும்.

**கவிக்கோ மு.மேத்தா: சமூகப் பார்வையும் கவிதை ஆளுமையும்**

புதுக்கவிதை வரலாற்றில் 1970-களில் எழுந்த 'வானம்பாடி இயக்கம்' தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அதுவரை அரசர்களையும், அழகையும் பாடிக்கொண்டிருந்த கவிதையை, உழைக்கும் மக்களின் பக்கமும், வீதிகளின் பக்கமும் திருப்பிய பெருமை வானம்பாடிகளுக்கு உண்டு. அந்த இயக்கத்தின் முன்னணி ஆளுமைகளுள் ஒருவர் கவிக்கோ மு.மேத்தா.

மேத்தாவின் கவிதைகள் பாமரனுக்கும் புரியும் எளிய மொழியில், பண்டிதர்களும் வியக்கும் ஆழமான தத்துவத்தைக் கொண்டவை. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள், வறுமை, காதல், மானுட அறம் எனப் பல்பரிமாணங்களில் பாடிய மேத்தா, சுற்றுச்சூழல் நசிந்து போவதையும், மனிதன் தன் வேர்களை மறந்து வாழ்வதையும் தீவிரமாகத் தன் கவிதைகளில் பதிவு செய்தார். 'மரங்கள்' கவிதையில் அவரது சுற்றுச்சூழல் சார் தத்துவப் பார்வையும், இயற்கை மீதான பரிவும் மிக உன்னதமான நிலையை எட்டுகின்றன.

**சுயநலமற்ற கொடையாளி: தியாகத்தின் வடிவமாக மரங்கள்**

மானுட உலகம் எதிர்பார்ப்புகளால் ஆனது. மனிதன் செய்யும் ஒவ்வொரு சிறு உதவிக்கு பின்னாலும் ஒரு சுயநலக் கணக்கோ, புகழுக்கான ஆசையோ ஒளிந்திருக்கும். ஆனால், இயற்கையின் அகராதியில் 'சுயநலம்' என்ற சொல்லுக்கே இடமில்லை. மரம் தன்னிடம் இருக்கும் அனைத்தையும் பிறருக்காகவே அள்ளித்தருகிறது. அது பூக்கும் போது வாசத்தையும், காய்க்கும் போது சுவையையும், வளரும் போது நிழலையும், மடியும் போது விறகையும் மனிதனுக்குக் கைம்மாறு கருதாமல் வழங்குகிறது.

மு.மேத்தா மரங்களை மனித குலத்தின் ஆகச்சிறந்த கொடையாளிகளாகவும், தியாகத்தின் உறைவிடமாகவும் பார்க்கிறார். மனிதன் எவ்வளவுதான் துரோகம் இழைத்தாலும், தன் குணத்தை மாற்றிக்கொள்ளாத உன்னதப் பிறவியாக மரங்களை அவர் வர்ணிக்கிறார்.

**"கைம்மாறு கருதாமல் காலம் முழுதும்**
**காற்றைச் சுத்திகரிக்கும் கருணை முகில்கள்!**
**தன்னை வெட்டத் துணியும் மனிதனுக்கும்**
**தன் நிழலைத் தந்திடும் நிர்மல குணத்தவர்கள்!"**[1]

கோடரியைக் கொண்டு தன் உடலைத் துண்டிக்கும் மனிதனுக்கும், வெயிலின் தாக்கம் தெரியாமல் இருக்கத் தன் எஞ்சிய கிளைகளால் நிழல் தரும் மரத்தின் குணம், மனிதன் கற்க வேண்டிய ஆகச்சிறந்த மன்னிப்பு மற்றும் தியாகப் பண்பாகும்.

**மனிதனின் நன்றியற்ற தன்மையும் இயற்கையின் சகிப்புத்தன்மையும்**

மனிதன் என்ற உயிரினம் பூமியில் தோன்றுவதற்கு கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மரங்கள் தோன்றிவிட்டன. பூமி மனிதன் வாழ்வதற்கு உகந்த இடமாக மாறியதே மரங்களின் ஒளிச்சேர்க்கை (Photosynthesis) மற்றும் ஆக்சிஜன் உற்பத்தியால் தான். மனிதன் தாயின் கருவறையில் இருந்து வெளியே வந்த நொடியில் இருந்து, சுடுகாட்டில் அவன் உடல் எரியும் வரை மரங்களின் தேவை அவனுக்கு இருக்கிறது.

ஆனால், மனிதன் நன்றியுணர்வு அற்றவனாக இருக்கிறான். காடுகளை அழித்துத் தொழிற்சாலைகளையும், பல்லடுக்குக்

குடியிருப்புகளையும் கட்டுகிறான். இந்த நன்றியற்ற தனத்தை மேத்தா மிக ஆழமான வலியுடன் பதிவு செய்கிறார். மரங்கள் மனிதனின் அநீதிகளைக் கண்டு எதிர்த்துப் போராடாமல், ஒரு மௌனச் சாமியாரைப் போல சகித்துக் கொள்கின்றன. அந்த மௌனம் பலவீனத்தின் அடையாளம் அல்ல; அது மனிதனின் அறியாமையைக் கண்டு கொள்ளும் ஞானத்தின் வெளிப்பாடு.

**பூமியின் பச்சைக் குடைகள்: புவி வெப்பமாதலுக்கு எதிரான அரண்**

இன்றைய நவீன உலகில் மனித குலம் எதிர்கொள்ளும் மிக உக்கிரமான பிரச்சினை புவி வெப்பமயமாதல் (Global Warming) மற்றும் பருவநிலை மாற்றம் (Climate Change) ஆகும். தொழிற்சாலைக் கழிவுகளாலும், வாகனப் புகையாலும் வளிமண்டலம் நச்சுக்காற்றாக மாறி வருகிறது. இந்தச் சூழலில் பூமித் தாயைக் காக்கும் ஒரே அரணாகத் திகழ்வது மரங்கள் மட்டுமே.

மு.மேத்தா மரங்களை "பூமியின் பச்சைக் குடைகள்" என்று அழகியலோடு உருவகிக்கிறார். சூரியனின் சுட்டெரிக்கும் கதிர்களையும், புற ஊதாக் கதிர்களையும் தன் தலைகளில் தாங்கிக் கொண்டு, பூமிக்குக் குளிர்ச்சியையும் மென்மையையும் தரும் அன்னையாக மரங்கள் விளங்குகின்றன.

**"சூரியனின் சினத்தைச் சுருட்டித் தன் தலையில்**
**சுமந்து கொள்ளும் பூமியின் பச்சைக் குடைகள்!**
**மண்ணின் தாகம் தணிக்க மேகங்களை**
**மழையாய் மாற்றும் மௌன மந்திரவாதிகள்!"**[2]

மரங்கள் இல்லையென்றால் பூமி ஒரு பாறை உருண்டையாக, உயிரற்ற கோளாக மாறியிருக்கும் என்ற உண்மையை இக்கவிதை வரிகள் அறிவியலோடு உணர்த்துகின்றன.

**பல்லுயிர்ச் சூழலின் புகலிடமும் காடுகளின் அழிவும்**

ஒரு மரம் என்பது வெறும் தண்டுப் பகுதியும் இலைகளும் கொண்ட தாவர அமைப்பு மட்டுமல்ல; அது ஒரு தனிப் பிரபஞ்சம். ஒரு மரத்தை நம்பி ஆயிரக்கணக்கான பறவைகள், பூச்சிகள், அணில்கள், கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் வாழ்கின்றன. காடுகள் என்பவை பூமியின் நுரையீரல்கள்.

மனிதன் தன் சுயநலத்திற்காக ஒரு மரத்தை வெட்டும்போது, அவன் ஒரு தாவரத்தை மட்டும் அழிப்பதில்லை; மாறாக, பல நூறு உயிரினங்களின் வீடுகளை, வாழ்வாதாரத்தை அழிக்கிறான். பல்லுயிர்ச் சூழல் (Biodiversity) சிதைக்கப்படும் போது, உணவுச் சங்கிலி அறுந்து போகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் விலங்குகள் உணவு தேடி மனிதக் குடியிருப்புகளுக்குள் நுழையும் அவலத்தை நாம் காண்கிறோம். இத்தகைய சூழலியல் சமநிலையின்மையைக் குறித்து மேத்தா கவிதையில் எச்சரிக்கை மணி அடிக்கிறார்.

**மரங்கள் புகட்டும் உன்னத வாழ்வியல் தத்துவங்கள்**

இயற்கையே மனிதனின் முதல் ஆசான். மரங்களின் ஒவ்வொரு அசைவிலும், வாழ்விலும் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய தத்துவங்கள் நிறைந்துள்ளன. மரங்கள் நமக்கு சகிப்புத்தன்மை, வளைந்து கொடுத்தல், மறுசுழற்சி போன்ற பாடங்களைக் கற்றுத் தருகின்றன.

இலையுதிர் காலத்தில் மரங்கள் தங்களின் இலைகளை இழக்கின்றன. ஆனால், அவை சோர்ந்து போவதில்லை. வசந்த காலம் வரும்போது மீண்டும் துளிர்க்கலாம் என்ற நம்பிக்கையோடு மௌனமாகக் காத்திருக்கின்றன. அதேபோல, காற்றில் உதிரும் இலைகள் மண்ணோடு மண்ணாக மக்கி, மீண்டும் அந்த மரத்திற்கே உரமாக மாறுகின்றன. மனிதன் தான் ஈட்டும் பொருளைச் சமூகத்திற்கே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற 'ஈகைப் பண்பை' இதன் மூலம் மரங்கள் உணர்த்துகின்றன. புயல் வரும்போது விறைப்பாக நிற்கும் மரங்கள் முறிந்து விழுகின்றன; வளையும் புற்களும் சிறிய மரங்களும் தப்பித்துக் கொள்கின்றன. இது மனித வாழ்வில் 'தலைக்கனம்' அழியக் காரணமாய் அமையும், 'பணிவு' வாழ்வைக் காக்கும் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

**எதிர்காலத் தலைமுறையும் மனிதனின் வரலாற்றுத் துரோகமும்**

மனிதன் இன்றைய லாபத்தை மட்டுமே நோக்குகிறான். நாளை பிறக்கப் போகும் தன் பேரக் குழந்தைகளுக்கோ, வருங்காலச் சந்ததிக்கோ அவன் எத்தகைய உலகத்தை விட்டுச் செல்லப் போகிறான் என்ற கவலை அவனுக்கு இல்லை. ஆறுகளையும், நிலத்தையும், காற்றையும்

நஞ்சாக்கிவிட்டு, வங்கிக் கணக்கில் பணத்தைச் சேர்த்து வைப்பதால் எந்தப் பயனும் இல்லை.

மு.மேத்தா இந்த வரலாற்றுத் துரோகத்தைக் கடுமையாகச் சாடுகிறார். நாம் நம் குழந்தைகளுக்குத் தரும் ஆகச்சிறந்த சொத்து சுத்தமான காற்றும், பசுமையான பூமியும்தான். அதை விடுத்து செயற்கை ஆக்சிஜன் சிலிண்டர்களை அவர்களுக்குச் சொத்தாகத் தருவது மனித இனத்தின் ஆகப்பெரும் தோல்வி ஆகும்.

**"காற்றைச் சிறைப்பிடித்து நரகமாக்கி விட்டு**
**கான்கிரீட் காடுகளைப் பரிசளிக்கப் போகிறோமா?**
**நாளை வரும் தலைமுறை நம் கல்லறைகளின் மீது**
**நன்றியோடு பூ தூவுமா? சாபமிட்டுப் போகுமா?"**[3]

**கவிதையின் அழகியலும் கவித்துவ உத்திகளும்**

மு.மேத்தாவின் கவிதை வெறும் அறிவுரை அல்ல; அது உயர்தரமான இலக்கிய உத்திகளைக் கொண்டது. வாசகனின் மனதில் காட்சிப் பிம்பத்தை (Imagery) ஏற்படுத்துவதில் இக்கவிதை வெற்றி பெற்றுள்ளது.

- **உருவக அணி** : மரங்களை 'பச்சைக் குடைகள்' என்றும், 'மௌன மந்திரவாதிகள்' என்றும் உருவகித்திருப்பது கவிதையின் அழகைக் கூட்டுகிறது.
- **தன்மை நவிற்சி அணி** : மரங்களுக்கு மனிதப் பண்புகளான கருணை, தியாகம், மௌனம் ஆகியவற்றை ஏற்றிப் பாடியிருப்பது வாசகனை மரங்களோடு உணர்வுப்பூர்வமாகத் தொடர்புபடுத்த உதவுகிறது.
- **எளிய மொழிநடை**: எவ்விதக் கடினமான சொற்களும் இன்றி, சாமானிய மனிதனும் படித்துப் புரிந்து கொள்ளும் வண்ணம் 'வானம்பாடி' நடையில் கவிதை அமைந்துள்ளது.

**முடிவுரை**

மு.மேத்தாவின் 'மரங்கள்' கவிதை என்பது காலத்தைக் கடந்த ஒரு சூழலியல் ஆவணம். மரங்களின் பெருமையைப் பாடுவதன் வழியே மனிதனின் சிறுமையையும் பேராசையையும் கவிஞர் தோலுரித்துக் காட்டுகிறார். இயற்கையை வெல்ல நினைக்கும் மனிதனின் முயற்சி, அவன் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் தற்கொலைக்கு ஒப்பானது.

இயற்கையோடு இணங்கி வாழ்ந்தால் மட்டுமே மனித இனம் இந்த பூமியில் நீடிக்க முடியும். "ஒரு மரத்தை நடுவது என்பது ஒரு நம்பிக்கையை நடுவது" என்பார்கள். கவிக்கோ மு.மேத்தாவின் வரிகளை உள்வாங்கிக் கொண்டு, காடுகளையும் மரங்களையும் காப்பது நமது முதன்மைக் கடமையாகும். கான்கிரீட் காடுகளுக்கு நடுவே ஆங்காங்கே சில பச்சைப் புள்ளிகளையாவது (மரங்களை) நட்டு வளர்ப்பதே நாம் கவிஞரின் கவிதைக்குச் செய்யும் உண்மையான மரியாதையாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. **மு.மேத்தா** – *'மு.மேத்தா கவிதைகள்' (முழுத் தொகுப்பு)*, குமரன் பதிப்பகம், தி.நகர், சென்னை – 2018.
2. **பாலச்சந்திரன், சு.** – *'புதுக்கவிதை: தோற்றமும் வளர்ச்சியும்'*; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 2015.
3. **திணைக்குடிமகன்** – *'தமிழ் இலக்கியத்தில் சூழலியல் சிந்தனைகள்'*; காவ்யா பதிப்பகம், சென்னை – 2021.
4. **சுவாமிநாதன், ம.ச.** – *'நமது சுற்றுச்சூழல்: சவால்களும் தீர்வுகளும்'*; பாரதி புத்தகாலயம், சென்னை – 2019.
5. **தமிழண்ணல்** – *'புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு'*; மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – 2012.
6. **முத்துமோகன், ந.** – *'வானம்பாடி இயக்கக் கவிதைகளின் தத்துவப் பின்னணி'*; அலைகள் வெளியீட்டகம், சென்னை – 2010.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *X*, பதிப்பு *23*, ஜனவரி – ஜீன் 2026
*Formally UGC Approved Journal (64089), © Author*

# தொகைப்பாடல்களில் வாழ்வியல் விழுமியங்கள்

**முனைவர். பா. ஈஸ்வரன்**
உதவிப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
அரசு மகளிர் கல்லூரி
வழுதக்காடு, திருவனந்தபுரம்.

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகின் செவ்வியல் மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி, இன்றும் வாழும் மொழியாக வளம்பெற்று விளங்குகிறது. தமிழ் மொழியின் செவ்வியல் தன்மைக்கு ஆதாரமாகச் சங்க இலக்கியம் விளங்குகிறது. சங்க இலக்கியமானது தமிழர்களின் வாழ்க்கைப் பதிவு இலக்கியமாகத் திகழ்கின்றது. சங்க காலத்தில் மக்கள் அகவாழ்க்கை புறவாழ்க்கை என்று இருவாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர். அகவாழ்வில் காதலையும் புறவாழ்வில் வீரத்தையும் இருகண்களாக நினைத்து வாழ்ந்துள்ளனர். அகத்திலும் புறத்திலும் ஒழுக்கமுறைமைகளைக் கையாண்டு வாழ்க்கை நடத்தினர் என்பதையும் நாம் அறிவோம். ஆதலால், சங்க இலக்கியத்திலுள்ள எட்டுத்தொகையில் இடம்பெறும் மக்களின் அகவாழ்வியலைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**எட்டுத்தொகை**

பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் எழுதப்பட்ட நூல்களைத்; தொகுக்கப்பட்டதால் இதற்கு எட்டுத்தொகை என்று பெயர் வந்தது.

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**

**இத்திறத்த எட்டுத் தொகை” – தமிழ் இலக்கிய வரலாறு. ப.33.**

என்பதாகும். இந்த எந்த எட்டு நூல்களில் ஐந்து நூல்கள் 1. நற்றிணை, 2. குறுந்தொகை, 3. ஐங்குறுநூறு, 4. கலித்தொகை, 5. அகநானூறு அகநூல்களாகும். இரண்டு நூல்கள் 1.பதிற்றுப்பத்து, 2. புறநானூறு புறநூல்களாகும். ஒரு நூல் 1. பரிபாடல் அகமும் புறமும் சார்ந்த நூலாகும்.

**பத்துப்பாட்டு**

நீண்ட அடிகளைக்கொண்ட பத்துப்பாடல்களைச் சேர்;த்து இதற்குப் பத்துப்பாட்டு என்று பெயரிட்டுள்ளனர். அவை,

**“முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**

**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய**

**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**

**பாலை கடாத்தொடும் பத்து” - தமிழ் இலக்கிய வரலாறு. ப.59.**

என்பதாகும். இவற்றில்

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை என்னும ஐந்து நூல்களும்; ஆற்றுப்படை நூல்களாகும். மேற்காணும் ஐந்து ஆற்றுப்படை நூல்களோடு ‘மதுரைக்காஞ்சி’ என்ற நூலையும் சேர்த்து ஆறு நூல்களையும் புறநூல்கள் என்று குறிப்பிடுவர்.

அகநூல்களாக

1. குறிஞ்சிப்பாட்டு,
2. முல்லைப்பாட்டு,
3. பட்டினப்பாலை மூன்றையும் குறிப்பிடுவர். அகமும் புறமும் சார்ந்த நூல்களாக ‘நெடுநல்வாடையைக்’ குறிப்பிடுவர்.

**திருமணத்தின் தோற்றுவாய்**

சங்க காலத்தில் ஒரு தலைவன் தலைவியைக் காதலித்துவிட்டுத் திருமணம் செய்யாமை அல்லது காதல் செய்யவில்லை என்று பொய் கூறிய நிகழ்வு நிகழ்ந்திருக்கவேண்டும். அதனால்தான் தொல்காப்பியர்,

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப” - தொல்.பொருள்.கற்.நூ.145.**

என்று கூறுகின்றதனை அறியமுடிகின்றது. ஆதலால், பொய்யையும், வழுவையும் நிகழாமல் தடுப்பதற்காக, “ஒருவனையும் ஒருத்தியையும் எதிர்நிறீஇ ‘இவளைக் கெள்ள இயைதியோ நீ’ எனவும், ‘இவற்குக் கொடுப்ப இயைதியோ நீ’ எனவும் இருமுது குரவர் கேட்டவழி அவர் கரந்த உள்ளத்தான் இயைந்தவழிக் கொடுப்பவாகலின் அது தானே ஒருவகையாற் கந்தருவ வழக்கமாம்” (பக்.167) என்று நச்சர் குறிப்பிடுகின்றார்.

**திருமணத் தோற்றத்திற்கான காரணம்**

சங்க இலக்கியத்தில் தலைவன் ஒருவன் தலைவியைக் களவில் மணந்துகொண்டபோது சாட்சியாக மனிதர்கள் யாருமில்லை. ஆனால், ஒரு நாரை மட்டும் இருந்திருக்கிறது. ஒருவேளை தலைவன் ஏமாற்றிவிடுவானோ என்ற ஐயம் தலைவிக்கு அன்றே ஏற்பட்டிருக்கின்றது. அதனால்தான், தலைவனும் தலைவியும் காதல் செய்ததற்குச் சாட்சியாக குருகு இருந்தது என்று குறிப்படுகின்றாள். இதனை,

**“யாரும் இல்லை தானே கள்வன்**

**தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ**

**தினைத் தாள் அன்ன சிறு பசுங் கால**

**ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்**

**குருகும் உண்டு தான் மணந்த நான்றே” - குறு. பா.25:1-5.**

எனும் பாடலடிகளில் தலைவி கூற்றின் மூலம் கபிலர் எடுத்தியம்புகின்றார்.

**ஒருமுலை அறுத்த திருமா உண்ணி**

ஒரு ஆடவன் திருமாவுண்ணி என்ற ஒரு பெண்ணைக் காதலித்து விட்டுப் பின்பு, அப்பெண்ணைக் காதலிக்கவில்லை என்று பொய் சொல்லியதால் அப்பெண் ஒரு முலையை அறுத்து எறிந்த செய்தியை,

**“எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**

**குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்**

**ஏதிலா ளன் கவலை கவற்ற**

**ஒருமுலை அறுத்த திருமா உண்ணி" - நற்.பா.216:6-9.**

என்னும் பாடலடிகளில் பரத்தை கூற்றின் வாயிலாக மதுரை மருதன் இளநாகனார் காட்சிப்படுத்தியுள்ளார். இவ்வாறு தலைவன் ஏமாற்றிவிடுவானோ என்கின்ற எண்ணம் தலைவிக்குத் தோன்றியமையும், தலைவன் தலைவியைக் காதலிக்க வில்லை என்று ஏமாற்றிய செயலும் சங்க காலத்தில் நடந்திருக்கின்றது. இம்மூல காரணமே கரணம் என்ற ஒரு முறை தோன்றுவதற்கு அடிநாதமாய் அமைந்திருக்கின்றது.

**அங்கிகரிக்கப்பட்ட பரத்தமை ஒழுக்கம்**

பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவன் மேற்கொண்டிருக்கும்போது தலைவி கருவுருவதற்குரிய நாட்களில் தலைவியைத் தலைவன் விட்டுப் பிரியக்கூடாது என்பதனை,

**"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**

**நீத்தகன் றுறையனார் என்மனார் புலவர்**

**பரத்தையிற் பிரிந்த காலையான" - தொல்.பொருள்.கற்.187.**

மேற்காணும் நூற்பா எடுத்துரைக்கின்றது. அதாவது, "பரத்தையிற் பிரிந்த காலத்தின் கண்ணுண்டான; இருதுக் காலத்தின்கட் சொற்கேட்கும் அணுமைக்கண் நீங்கியிருந்து; அவ்விருதுக்காலத்தின் புறங்கூறாகிய பன்னிரண்டு நாளும் இருவரும் பிரிந்துறையார்" (ப.271) என்று புலவர் கூறுவதாக உரை வகுத்துள்ளார் நச்சினார்க்கினியர். மேலும், "பூப்பின் முன்னாறு நாளும் பின்னாறு நாளுமென்றும், பூப்புத் தோன்றிய நாள் முதலாகப் பன்னிரண்டு நாளுமென்றும், நீத்தல் தலைவன்மேல் ஏற்றியும், அகறலைத் தலைவிமேல் ஏற்றியும் உரைப்பாருமுளர். பரத்தையிற் பிரிந்த காலத்துண்டான பூப்பெனவே" (ப.271இல்) என்று நச்சர் குறுப்பிட்டுச் செல்வதைக் காணமுடிகின்றது.

**வைகறைப்பொழுதில் தலைவியின் நெஞ்சம்**

பூப்பூக்காலத்தில் தலைவனைப் பிரிந்திருக்கத் தலைவியானவள் அஞ்சுகின்றாள். வைகறைப்பொழுதில் கோழி குக்கூ என்றால் கூட,

உறக்கத்தில் இருக்கின்ற தலைவியின் நெஞ்சம் திடுக்கிடுகிறது என்பதனை,

**“ ‘குக்கூ’ என்றது கோழி; அதன் எதிர்**
**துட்கென்றன்று என்தூஉ நெஞ்சம் –**
**தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்**
**வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே” - குறு.மரு.பா.157.**

எனும் பாடலடிகள் சான்று பகர்கின்றன.

**ஐங்குறுநூற்றில் வாழ்வியல்**

முல்லை நிலக் குடும்பக்காட்சியை எடுத்துரைக்க நினைத்த முல்லைத்திணையின் ஆசிரியர் பேயனார் உவமை என்ற உத்திமுறையைக் கையாண்டு காட்சிப்படுத்துகின்றார். இதனை,

**“மறியிடைப் படுத்த மான்பிணை போலப்,**
**புதல்வன் நடுவண னாக, நன்றும்**
**இனிது மன்றவவர் கிடக்கை முனிவின்றி**
**நீனிற வியலகம் கவைஇய**
**ஈனும், உம்பரும், பெறலருங் குரைத்தே.” - ஐங்.முல்.பா.401.**

என்னும் பாடலடிகள் நவில்கின்றன. இங்கு தலைவன் - தலைவி - மகன் என்னும் மூவரையும் காட்சிப்படுத்த நினைத்த ஆசிரியர், அனைவரும் பார்த்த அல்லது கண்டிருந்த விலங்கினக்காட்சியைக் காட்சிப்படுத்தி தலைவனோடு தலைவி குடும்பம் நடத்துகின்ற கருத்தியலை எடுத்துரைக்கின்றார். இங்கு மானின் கன்றானது புதல்வனுக்கு உவமையாகச் சுட்டப்பட்டிருக்கின்ற கருத்தினையும் அறியமுடிகின்றது. குட்டி மானை நடுவில் வைத்துள்ள ஆண் பெண் மான்களைப் போல தலைவனும் தலைவியும் மகனை நடுவில் படுக்க வைத்து உறங்குவது இனிமையான உணர்வுப்பூர்வமான காட்சியாகும். கோபமில்லாமல் காட்சியளிக்கின்ற நீல நிற வானத்தில் வாழும் தேவர்களும் தலைவன் தலைவியைப் போல் இவ்வாறான இன்பத்தைப்; பெற இயலாது என்கிறார் பேயனார்.

**புதல்வன் - தந்தை - தாய் அன்பு மிகுதிக் காட்சி**

குடும்ப வாழ்வியலில் அன்பு மிகுதியானால் தந்தை மகனைக் கட்டியனைத்துத் தழுவுவது என்பது இயல்பாக நடைபெறுவதாகும். இக்காட்சியைக்கண்ட தாயானவள் தன்னுள் ஏற்பட்ட அன்பு மிகுதியால் இவ்விருவரையும் கட்டியனைத்து அன்பு காட்டுவதை,

**“புதல்வன் கவைஇயினன் தந்தை மென்மொழிப்**
**புதல்வன் தாயோ இருவருங் கவையினள்**
**இனிது மன்ற அவர்கிடக்கை**
**நுனியிரம் பரப்பின்இவ் வுலகுடன் உறுமே.” - ஐங்.முல்.பா.409.**

என்னும் ஐங்குறுநூற்றிலுள்ள முல்லைப்பாடல்வழி அறியமுடிகின்றது. இக்காட்சியைப் பார்ப்பதற்கு இனியாக உள்ளது. அடுமட்டுமல்லாமல் மிகப்பெரிய பரப்பினையுடைய இந்த உலகமே இக்காட்சிக்கு விலையாகக் கொடுப்பதுதான் பொறுத்தமுடையது என்கிறார் புலவர்.

**குடும்பத்தில் அன்பு மிகுதி**

கிராமப்புறங்களில் இன்றளவிலும் மாலைநேரத்தில் கட்டிலை வீட்டின் முற்றத்தில் இடுகிறார்கள். பின்பு அக்கட்டிலில் தாய் அமர்ந்திருக்கத் தந்தையின் மார்பில் மகன் விளையாடும்போது ஏற்படும் சிரிப்பு, மகிழ்ச்சிக் காட்சியைக் காணமுடிகின்றது. இதனை,

**மாலை முன்றிற் குறுங்காற் கட்டில்**
**மனையோள் துணைவி யாகப், புதல்வன்**
**மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்**
**பொழுதிற்கு ஒத்தன்று மன்னே,**
**மென்பிணித் தம்ம பாணன தியாழே.” - ஐங்.முல். பா.410.**

என்னும் பாடலடிகள் காட்சிப்படுத்துகின்றன. இப்படிப்பட்ட இனிய மகிழ்ச்சியை யாழின் இசை இனிமையொடு ஒப்பிடப்படுகிறது. அதமட்டுமல்லாமல் யாழின் இனிய இசைகூட தலைவன் - தலைவி -மகன் இம்மூவரின் மகிழ்ச்சிக்கு ஈடாகாமல் தோற்றுப்போகும் என்று புலவர் வருணித்துள்ளார்.

**தலைவன் மீது தலைவி கொண்ட நட்பு**

குறிஞ்சிநிலத் தலைவன் மீது தலைவியானவள் கொண்டுள்ள காதல் எந்த அளவிற்கு உயர்வானது என்றால் நிலத்தின் அகலத்தைவிடப் பெரியது. வானத்தின் உயரத்தைவிட உயரமானது. கடலின் ஆழத்தைவிட ஆழமானது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைப் பூக்கும் குறிஞ்சி மலரைவிடச் சிறப்பானது என்பதை,

**"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று**
**நீரினு மாரள வின்றே சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப் புக்கொண்டு**
**பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே." - குறு.பா.3.**

என்னும் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. ஆனால், இன்றைக்குள்ள ஆண்-பெண் காதல் பெரும்பாலும் எவ்வாறு இருக்கின்றது என்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

**சங்ககாலக் காதல்**

ஒரு ஆணின் மனசும் பெண்ணின் மனசும் ஒத்துப்போவதற்கு இவ்விருவரின் தாய் தந்தையர் உறவினராக இருக்கவேண்டும் என்பது அவசிமில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் முன்பே அறிமுகமானவர்களாக இருக்கவேண்டும் என்பதும் தேவையில்லை. இதனை,

**"யாயு ஞாயும் யாரா கியரோ?**
**எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்?**
**யானு நீயு மெவ்வழி யறிதும்?**
**சேம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே." - குறு.பா.40.**

என்னும் பாடலடிகள் சான்று பகர்கின்றன. செம்மண் நிலத்தில் மழை பெய்தால் அம்மண்ணின் நிறத்திற்கு ஏற்றவாறு மழை நீரானது தன்னுடைய நிறத்தை மாற்றிக்கொள்ளும். மழைநீரின் வெண்மை நிறத்தை பிரித்தறியமுடியாது. அதுபோல இவ்விருவரின் மனுசும் ஒன்றிவிட்டது என்பதனைக் காணமுடிகின்றது.

**பாராட்டும் மகிழ்வும்**

தலைவியானவன் தன்னுடைய தாய் தந்தையின் அரவணைப்பில் இருக்கின்றபோது இவளுக்கு ஒரு வேலையும் செய்யத்தெரியாது. ஆனால், அதே பெண் திருமணமான பின்பு தன்னுடைய கணவனுக்குச் சுவையான உணவைச் சமைத்துக்கொடுக்கின்ற அளவிற்குப் பக்குவப்படுகின்றாள் என்பதனை,

**“முளிதயிர் பிசைந்த காந்தள் மென்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅது உடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**
**தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.” - குறு.பா.167.**

என்னும் பாடல் உணர்த்துகின்றது.

**சங்க நன்நெறி வாழ்வியல்**

சங்க கால மக்கள் தங்களுடைய இல்வாழ்க்கையில் நல்ல நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை,

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;;**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;**
**பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;**
**ஆன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை;**
**அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;**
**செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை;**
**நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை;**
**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்;**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல். - கலி.பா.133.**

மேற்காணும் கலித்தொகைப் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. 1.இல்வாழ்க்கை என்பது ஏழை எளியவர்களுக்கு உதவவேண்டும். 2. போற்றுதல் என்பது தன்னைச் சார்ந்தவர்களைப் பிரியாமல் இருப்பது. 3.பண்பு எனப்படுவது உலக நடப்புகளை அறிந்து நடந்துகொள்ளுதல். 4. ஆன்பு எனப்படுவது தன் உறவினர்களை வெறுக்காமல் இருப்பது. 5. அறிவு

எனப்படுவது அறிவற்றவர்களின் சொற்களைப் பொறுத்துக்கொள்ளுதல், 6. செறிவு எனப்படுவது சொன்ன வாக்கைக் காப்பது. 7.நிறை எனப்படுவது பிறர் சொன்ன இரகசியத்தை பிறர் அறியாமல் பாதுகாப்பது. 8. முறை எனப்படுவது முறைதவறாமல் நீதி வழங்குவது. 9.பொறை எனப்படுவது பகைவரைப் பொறுத்துக்கொள்வது. இவ்வாறான நீதிநெறிகளைச் சங்ககால மக்கள் தங்களின் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை அறியலாம். இவ்வாறு கடைப்பிடித்தால் வாழ்வில் முன்னேறலாம்.

**தீது செய்யாமை**

நாம் ஒருவருக்கு நல்லது செய்யவிட்டாலும் பரவாயில்லை. தீயது செய்யாமல் இருப்பதே வாழ்வின் சிறந்த நல்நெறியாகும். இச்சிறந்த நன்நெறியினை,

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே. – புறம்.பா.195**

என்னும் பாடலடிகளின் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு செய்தால் நம்மைப் பிறர் புகழவும் செய்யவர். நம்மை நாமே நல்வழிப்படுத்துவதற்கும் சிறந்தவழியாகும் என்பதனை அறியமுடிகின்றது.

அன்பு செலுத்திய ஆணிற்கும் பெண்ணிற்குமிடையே பொய்யும் குற்றமும் உருவாகிய காரணத்தினால் பெரியவர்கள் முன்னிலையில் பெண்வீட்டார் பெண் கொடுப்ப ஆண் வீட்டார் பெண் கொள்ளுதல் என்னும் திருமணம் முறையினை உருவாக்கியுள்ளதை அறியமுடிகிறது. ஆடவன் பெண்ணைக் காதலித்துவிட்டு ஏமாற்றிய செயல் சங்க காலத்திலும் நடந்தேறியிருக்கிறது. பாதிக்கப்பட்ட திருமாஉண்ணிபெண் தன்னுடைய கொங்கைகளில் ஒன்றை திருகி எறிந்த செயலை காணமுடிகிறது. பரத்தமை ஒழுக்கம் சங்க காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்திருக்கின்றது என்பதை தொல்காப்பியமும் உறுதிப்படுத்துகிறது. பூப்பின் பின் பன்னிரண்டு நாட்களும் பெண்கள் கருவுறக்கூடிய காலம் என்பதால் அந்த நாட்களில் தலைவன் தலைவியோடுதான்

இருக்கவேண்டும் என்ற நியதியும் இருந்திருக்கிறது. குடும்பத்தில் தலைவன் தலைவி மகன் மூவரும் முற்றத்தில் அன்போடு மகிழ்வுற்றிருந்த நிலையினை அறியமுடிகிறது. சங்க காலத்தில் கலப்புத்திருமணமுறை நிகழ்ந்திருப்பதையும் காணமுடிகிறது. திருமணத்திற்கு முன் பின் பெண்ணுடைய நிலைபாடு சுட்டப்பட்டுள்ளது. வாழ்வியல் நியதிகள் தொகை நூற்களில் அழகுற எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**:


1. ஆசிரியர் பலர், சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம், தொகுதிகள் – 22, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.இ 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.இ அம்பத்தூர். சென்னை 600 050. முதற்பதிப்பு.2024.
2. வையாபுரிப்பிள்ளை, எஸ். (தொ.ஆ., & ப.ஆ) சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை – 1, முதற்பதிப்பு:1940.
3. இலக்குவனார், சி. தொல்காப்பிய ஆராய்ச்சி, சாரதா மாணிக்கம் பதிப்பகம், பழைய எண்.31, புதிய எண்.10, பழண்டியம்மள் கோயில் தெரு, ஆதம்பாக்கம், சென்னை -88, முதற்பதிப்பு: 2009.
4. கந்தசாமி, சோ.ந. தமிழிலக்கணச் செல்வம், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001, முதற் பதிப்பு : 2007.
5. தமிழண்ணல், உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி.வளாகம், தரமணி, சென்னை – 600 113, முதற்பதிப்பு: 2004.
6. பேராசிரியர் (உ.ஆ), தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை. முதற் பதிப்பு:1959.
7. அடைக்கலசாமி, எம். ஆர், தமிழ் இலக்கிய வரலாறு. கழக வெளியீடு, 154. டி.டி.கே. சாலை. சென்னை-18. முதற் பதிப்பு.1969.